உ

श्रीशंकरभगवत्पादविरचिता

श्री मन्त्रमातृका पुष्पमालास्तवः

ஸ்ரீசங்கரபகவத்பாதர்

திருவாய் மலர்ந்தருளிய

ஸ்ரீமந்த்ர மாத்ருகா புஷ்பமாலா ஸ்தவம்

வாதூல. வே. ராமசந்த்ர சர்மா இயற்றிய

மகரந்தம்

என்னும் தமிழ் அநுவாதத்துடன் கூடியது

ஸ்ரீ பக்த ஸமாஜம்

மாம்பலம் : : சென்னை-33.

Scanned by CamScanner

தோற்றுவாய்

हरस्वरैश्चतुर्वर्गपदं मन्त्रं सबिन्दुकम् ।
देव्या जपत विप्रेन्द्रा अन्या वाचो विमुञ्चथ ॥

ஹகாரம், ரேபம், (ரகாரம்) இவைகளின் ஈற்றிலே பிந்து வைக் கொண்டு விளங்குவதும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் (அறம, பொருள், இன்பம், வீடு) என்ற நான்கு புருஷார்த்தங்களுக்கும் நிலைத்த இருப்பிடமாயுள்ளதுமான ஸ்ரீதேவியினுடைய ஹ்ரீங்காரம் என்னும் மந்த்ராக்ஷரத்தை ஓ அந்தணர்களே ! ஜபம் செய்யுங்கள். பிறவனவாம் பயனற்ற சொற்களைக் களைவீர்களாக என்பது ஆன்ரோர் வாக்கு.

ஸ்ரீ சங்கரபகவத் பாதர் இயற்றிய துதி நூல்கள் பலவற்றுள் இந்த, "மாத்ருகா புஷ்பமாலா ஸ்தவம்" என்பதும் ஒன்று. இச் சிறிய ஸ்தவமானது, சார்தூல விக்ரீடிதம்" என்ற யாப்பிலே அழகாயமைந்துள்ளது. பலச்ருதியோடு பதினேழு செய்யுட்களைக் கொண்டு விளங்குவது, மாநஸபூஜையின் மாண்பைப் பெரிதும் போற்றி உணர்த்துவதாமாகும.

மற்றும், இச்சிறிய நூல் அழகிய நடையோடு சொல்வளம் நிறைந்தும், பொருள் வளம் செரிந்தும் அமையப்பெற்று ஆழ்ந்த உட்கருத்துக்கள் கொண்டு, ஷோடசாக்ஷரியினுடைய ஒவ்வொரு அக்ஷரத்தையும் ஒவ்வொரு செய்யுளின் துவக்கத்திலே அமையப்பெற்று விளங்குவதும் இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

அதாவது ஷோடாசாக்ஷரியினுடைய விளக்கங்களை வெளிப்படையாகச் சொல்லாது, தொண்டன் மாநஸிகமான செயல்கள் யாவையும் ஒன்று திரட்டி அன்னையின் அழகிய சேவடிகளில் ஒவ்வொன்றுக உபசாரம் செய்து, மனக்கண்ணிலே அன்னையை உருவகம் செய்து, தன்னையே அன்னையினிடம் ஆத்ம ஸமர்ப்பணம் செய்யும் சரணாகதி தத்துவத்தைச் சொல்லி விளங்க வைப்பதுமாகும்.

ஆயினும், இத்தகுதியானது புறத்தூய்மையும், அகத்தூய்மையும், இடையருத பற்றுக்கோடும ஓர் உத்தமத் தொண்டனால் ஸாதிக்க வல்லதேயன்றி, ஸாமான்ய மக்களால் முடியாத காரியமாகும். இதற்கு முதற்படியாக ஆடம்பரமற்ற பாஹ்ய (வெளிப்படைய) பூஜையினைச் செய்து வரப்பழக வேண்டும்.

Scanned by CamScanner

மனம் ஒரு முகத்துடன் குவிந்து உறுதி கொள்ளப்பழக வேண்டும். அத்துடன் பொறிகளை அடக்கியாளப் பழகவேண்டும். ஸ்ரீகுருவினிடத்தில் அசைக்கமுடியாத அன்பும், பக்தியும், விநயமும், மனநெகிழ்ச்சியும் வளரவேண்டுவது இன்றியமையாததாகும்.

இன்னோரன்ன பல நிலைகளும் கைவரப்பெற்ற பிறகுதான் ஒரு தொண்டன் மானஸிக பூஜையைத் துவக்கத் தகுதி வாய்ந்தவனாக முடியும் என்பது நமது சாஸ்த்ரங்களிலே ஆன்றோர்களான மஹர்ஷிகள் கண்ட துணிபுமாகும். இவ்விதமல்லாது, எடுத்த எடுப்பிலே கண்ணை மூடிக்கொண்டு மூலமந்த்ரங்களை லக்ஷக்கணக்காக ஆவிருத்தி செய்துள்ளேன். அன்னையை நேரில் காக்ஷி கொண்டேன் என ஆரவாரம் செய்வதும், தன்னையே தான் ஏமாற்றிக் கொள்வது மாகும். உளத்தூய்மையும், பிறத்தூய்மையையும், பற்றற்ற பக்தியும் இலலாது ஒன்றும் பலிக்காது.

எனவே, மக்களுக்கு பக்தி அவசியமாதலால், அதற்கு அடிப்படையாக ஸத்வங்களைப் படிப்பதும் அவசியமாகிறது. அவ்விதம் படிக்கும் பொழுது பொருளையுணராமலும், சரியான உச்சாரண மிலலாமலும் படிப்பது பாவத்தைக் சுமப்பதாகும் என வேதங்கள் கோஷிக்கின்றன. அக்காரணம் கருதி இச்சிறு நூலை வாசகர்கள் பொருள் உணர்ந்து படித்துப் பயன் பெறக் கருதி ஓர் குறிப்புரையும், மந்த்ரங்களுக்குக் குறிப்பாக விளக்கமும் வரைந்து கொடுக்கப் பெற்றுள்ளது. இச்சிறு நூலை உட்புகுந்து ஆராய்ந்தால் ஒருவன் நற்குணங்கள் நிரம்பிய பரிபூர்ண நிலையை யெய்திய மனிதனாகத் திகழ முடியும் என வற்புறுத்துவதையும் காணலாம்.

ஆகவே, இச்சிறிய ஸத்வத்தை அன்னையின் பக்தியிலே ஒன்றித்திளைத்துள்ள அன்பர்களான ஆண், பெண் அனைவரும் பொருளுணர்ந்து பாராயணம் செய்து, தக்கதோர் நெறியிலே நின்று ஸ்ரீகுருவை நாடி, மந்திரங்களின் மஹிமைகளையுணர்ந்து கொண்டு, அன்னையின் திருவருளுக்குத் தங்களை தகுதியுள்ளவர்களாகச் செய்து கொள்ள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

ஆசிரியன்

Scanned by CamScanner

शिवाभ्यां नमः

श्रीमच्छंकरभगवत्पादविरचितः

श्री मन्त्रमातृका पुष्पमालास्तवः

कल्लोलोल्लसितामृताब्धिलहरीमध्ये विराजन्मणि-
द्वीपे कल्पकवाटिकापरिवृते कादम्बवाट्युज्ज्वले ।
रत्नस्तम्भसहस्रनिर्मितसभामध्ये विमानोन्नते[1]
चिन्तारत्नविनिर्मितं जननि ते सिंहासनं भावये ॥ १ ॥

கல்லோலோல்லஸிதாம்ருதாப்திலஹரீமத்யே
விராஜந்மணி-
த்வீபே கல்பகவாடிகாபரிவ்ருதே காதம்ப
வாட்யுஜ்ஜ்வலே.
ரத்நஸ்தம்ப ஸஹஸ்ர:நிர்மித ஸபாமத்யே
விமாநோத்தமே
சிந்தாரத்ன விநிர்மிதம் ஜநநி தே ஸிம்ஹாஸநம்
பாவயே (1)

(ப-ரை) **हे जनि** - ஓ அன்னையே! **कल्लोल-उल्लसित-अमृत अब्धि-लहरी - मध्ये** - அலைகளுடைய எழுச்சியால் வனப்புடன் விளங்குகின்ற அமுதக்கடலின் அலைகளுடைய நடுவில்; **विराजन् - मणिद्वीपे** - மிகவும் பிரகாசிக்கின்ற இரத்தினத் தீவில்; **कल्पक - वाटिका परिवृते** - கற்பகத்தருக்கள் நிறைந்த உத்தியான வனத்தினால் சூழப்பட்டதும், **कादम्ब - वाटी - उज्ज्वले** - கடம்ப மரங்களுடைய ஸமூஹங்களால் மிகுந்த ஒளியுடன் விளங்குவதும் ஆன; **रत्नस्तम्भ-सहस्र-निर्मित - सभा-मध्ये** - இரத்தினங்களான தூண்களுடைய ஆயிரங்களால் நிர்மாணம் செய்யப்பட்ட ஸபையினுடைய

---

1. विमानोत्तमे பா-ம்.

நடுவில்; **विमान - उत्तमे** - சிறந்த மாளிகையில்; **चिन्तारत्न विनिर्मितम्** - சிந்தாமணிக் கற்களால் நிர்மாணம் செய்யப்பட்ட; **ते** - உன்னுடைய; **सिंहासनम्** - ஸிம்ஹாஸனத்தை; **भावये**-(நான்) தியானம் செய்கிறேன்.

(பொழிப்புரை) ஓ அன்னையே! மிகவும் அழகாகப் பொங்கியெழுகின்ற அமுதக் கடலின் அலைகளுடைய நடுவே மிக்க ஒளியுடன் இயங்கும் இரத்தினத் தீவிலே, யாசகர்களுக்கு அவர்கள் விரும்பிய யாவையும் வரையாது கொடுக்கும் திறமை வாய்ந்த கற்பகத்தருக்களால் சூழப்பெற்று கடம்பமரங்கள் அடர்ந்த பூங்காவின் நடுவே, இரத்தினங்கள் இழைக்கப் பெற்ற ஆயிரம் தூண்களைக் கொண்டு நிர்மாணம் செய்யப் பெற்ற அவையின் நடுவே அமைந்துள்ள விமாநத்திலே, திளைத்த அளவிலே தொண்டர்களுக்கு வாரிச்சொரிவதில் இணையற்று விளங்குகின்ற சிந்தாமணிக் கற்களிழைக்கப் பெற்ற உனது ஒளியுடன் இயங்கும் திவ்யஸிம்ஹாஸநத்தை நான் மனத்தால் போற்றுகிறேன்.

चिन्तारत्नविनिर्मितम् - சிந்தாரத்நவிநிர்மிதம் என்ற வாக்யத்தின் பொருள் வருமாறு. சிந்தை (நினைவு) என்னும் இரத்தினத்தினால் நிர்மாணம் செய்யப் பெற்றது எனச் சொன்னது. தொண்டனுடைய சிந்தனை யென்னும் மணிகளால் சிறப்புடன் நிர்மாணிக்கப் பெற்றது அந்த அன்னையினுடைய ஸிம்ஹாஸநம் என்பதாகும். தொண்டன் அன்னையினிடம் தனது குறைகளைத் தெரிவிப்பதற்கு முன்பு தூய உள்ளத்திலே சிந்தனைகள் அலை அலையாகத் தோன்றுவதுமாம். அத்தகைய எண்ணங்கள் என்னும் அலைகளை இங்கு சிந்தாமணிக் கற்கள் என உருவகம் செய்துள்ளது. ஆகவே தனது மானஸிகமாகத் தோன்றிய தூய எண்ணங்களைக் கொண்டு அன்னை அமருவதற்கு ஆஸநத்தைக் கவி கல்பனை செய்கிறார் என்பது இச் செய்யுளின் ஸாரம். (1)

Scanned by CamScanner

एणाङ्कानलभानुमण्डललसच्छीचक्रमध्ये स्थितां
बालार्कद्युतिभासुरां करतलैः पाशाङ्कुशौ बिभ्रतीम् ।
चापं बाणमपि प्रसन्नवदनां कौसुम्भवस्त्रान्वितां
तां त्वां चन्द्रकलावतंसमकुटां चारुस्मितां भावये ॥२॥

ஏணுங்காநலபாநு மண்டல லஸத்ச் ச்ரீசக்ரமத்யே
ஸ்திதாம்
பாலார்க்கத்யுதி பாஸுராம் கரதலை: பாசாங்குசௌ
பிப்ரதீம்.
சாபம் பாணமபி ப்ரஸந்ந வதநாம் கௌஸும்ப
வஸத்ராந்விதாம்
தாம் த்வாம் சந்த்ரகலாவதம்ஸமகுடாம் சாருஸ்
மிதாம் பாவயே.

(ப-ரை) **एण-अङ्क-अनल - भानु - मण्डल - लसत् श्रीचक्र-मध्ये** - சந்த்ரமண்டலம், அக்னிமண்டலம், ஸூர்ய மண்டலம் இவைகளால் சோபிக்கின்ற ஸ்ரீ சக்ரத்தினுடைய நடுவில்; **स्थिताम्** - இருக்கின்றவளும்; **बाल-अर्क द्युति-भासुराम्** - பாலபாஸ்கரனுடைய ஒளியே போன்ற ஒளியையுடையவளும்; **करतलैः** - கைகளினல்; **पाश-अङ्कुशौ** - பாசம், அங்குசம் இவையிரண்டையும்; **चापम् - வில்லையும்; बाणम् - अपि** - பாணத்தையும்; **बिभ्रतीम्** - தரித்துக் கொண்டிருக்கின்றவளும்; **प्रसन्न-वदनाम्** - மகிழ்ச்சியால் மலர்ந்த முகத்தோடு கூடியவளும்; **कौसुम्भ-वस्त्र-अन्विताम्** - பலநிறம் பொருந்திய வஸ்த்ரத்தோடு கூடியவளும்; **चन्द्र-कला-अवतंस - मकुटाम्** - சந்த்ரகலையினல் அலங்கரிக்கப் பெற்ற மகுடத்தோடு கூடியவளும், **चारु - स्मिताम्** - அழகிய புன்முறுவலோடு கூடியவளும் ஆன; **ताम्** -

Scanned by CamScanner

அச்சிறப்பு வாய்ந்த ; **त्वाम्** - உன்னை ; **भावये** - (நான்) தியானம் செய்கிறேன்.

(பொழிப்புரை) ஓ அன்னையே ! மூன்று மண்டலங்களோடு ஒளிருகின்ற ஸ்ரீசக்ரத்தில் விளங்குபவளும், இளம்பரிதியின் ஒளியே போன்று திகழ்பவளும் திருக்கரங்களிலே பாசம், அங்குசம், வில், பாணம் இவைகளைக்கொண்டு, மலர்ந்த முகத்துடன், பலநிறங்களோடு பொலிவுறும் சிறந்த வஸ்த்ரத்தையணிந்து, பாதிமதியைத் தனது சென்னியிலே சூடிக்கொண்டு, புன்முறுவலுடன் விளங்கும் சிறப்புடன் கூடிய உன்னை நான் மனத்தால் போற்றுகிறேன்.

இச் செய்யுளில் மூன்று மண்டலங்களோடு கூடிய ஸ்ரீசக்ரம் எனச் சொல்லியுள்ளது. அதனுடைய விளக்கம் வருமாறு—

அகாரம் முதல் பதினாறு ஸ்வரங்களோடு. அம்ருதா, மாநதா, பூஷா, புஷ்டி:, ப்ரீதி:, ரேவதீ, ஹ்ரீமதீ, ஸ்ரீ:, காந்தி:, ஸுதா; ஜ்யோத்ஸ்நா, ஹைமவதீ. ச்சாயா, ஸம்பூரணீ, ராமா ச்யாமா என்ற பதினாறு கலைகளோடும் கூடியதும் சந்த்ரமண்டலமாகும். ககாரம் முதல் அநுலோமமாக (வரிசையாக) பன்னிரண்டு அக்ஷரங்களோடும் பகாரம் முதல் ப்ரதிலோமமாக (தலைகீழாக) பன்னிரண்டு அக்ஷரங்களோடும், தபிநீ, தாபிநீ, தூம்ரா, மரீசி, ஜ்வாலிநீ, ருசி; ஸுஷும்நா, போகதா, விச்வா, போதிநீ, தாரணீ, க்ஷமா, என்ற பன்னிரண்டு கலைகளோடும் கூடியது ஸூர்ய மண்டலமாகும். மகரம் முதல் பத்து அக்ஷரங்களோடும், தூம்ராச்சிஸ், ஊஷ்மா, ஜ்வலிநீ. ஜ்வாலிநீ, விஸ்புலிங்கிநீ, ஸுஸ்ரீ:, ஸுரூபா, கபிலா. ஹவ்யவஹா, கவ்யவஹா என்ற பத்துக் கலைகளோடும் கூடியது அக்நிமண்டலமாகும்.

இம்மூன்று மண்டலங்களோடு விளங்குகின்ற ஸ்ரீசக்ரத்தினுடைய நடுவில் அமர்ந்து கொண்டு உதயகாலத்திலே தோன்றும் இளம்பருதியே போன்ற ஒளியுடன், (விளங்கிக்கொண்டு) தன்னுடைய திருக்கரங்கள் நான்கிலும், முறையே பாசம், அங்குசம், வில். பாணம்

என்ற நான்கு திவ்யாயுதங்களையும் தாங்கிக் கொண்டு மகிழ்ச்சியின் காரணமாகத் தெளிந்த முகத்தோடு கூடியவளாக பலநிறங்களாலான திவ்ய வஸ்த்ரத்தை யணிந்துகொண்டு, பாதிமதியைச் சூடிய அழகிய கிரீடத்தோடு, கண்டோர் மனதைக் கவருமியல்பு வாய்ந்த புன்முறுவலுடன் பொலிகின்ற பெருமை வாய்ந்த உனது திருமேனியை நான் தியானம் செய்கி றேன் என்பது இச்செய்யுளின் ஸாரமாகும்.

குறிப்புரை—(1) அ ஆ இ ஈ உ ஊ ஋ ॠ ऌ ॡ ए ऐ ओ औ अं अः இந்த பதினாறு அக்ஷரங்களும் சந்த்ரமண்ட லத்திற்கு உரியனவாம்.

(2) क ख ग घ ङ च छ ज झ ञ ट ठ என்ற பன்னி ரண்டு அக்ஷரங்களும், भ ब फ प न ध द थ त ण ढ ड என்ற பன்னிரண்டு அக்ஷரங்களும் ஆக இருபத்து நான்கு அக்ஷரங்களாகின்றன. இவைகள் ஸூர்ய மண்டத் திற்கு உரியனவாம்.

(3) म य र ल व श ष स ह क्ष என்ற இப்பத்து அக்ஷ ரங்களும் அக்னி மண்டலத்திற்கு உரியனவாம்.

ईशानादिपद [1]शिवैवफलकं रत्नासनं ते शुभं
पाद्यं कुङ्कुमचन्दनादिभरितैरर्घ्यं सरत्नाक्षतैः।
शुद्धैराचमनीयकं तव जलैर्भक्त्या मया कल्पितं
कारुण्यामृतवारिधे तदखिल संतुष्टये कल्पताम् ॥ ३ ॥

ஈசாநாதிபதம் சிவைகபலகம் ரத்நாஸநம் தே சுபம்
பாத்யம் குங்குமசந்தநாதி பரிதைரர்க்யம்
ஸரத்நாக்ஷதை:.
சுத்தைராசமநீயகம் தவ ஜலைர் பக்த்யா மயா கல்பிதம்
காருண்யாம்ருதவாரிதே ததகிலம் ஸந்துஷ்டயே
கல்பதாம்.

---

1. शिवैकफलदम् பா-ம்.

(ப-ரை) **कारुण्य - अमृत-वारिधे** - கருணையென்னும் அமுதக்கடலுக்கு இருப்பிடமாயுள்ள ஓ அன்னையே! **ते** - உன்னுடைய; **ईशान-आदि-पदम्** - ஈசானன் முதலான நான்கு பாதங்களோடு கூடியதும்; **शिव-एक-फलकम्** - ஸதாசிவனென்ற ஒரே பலகையோடு கூடியதும் ஆன; **शुभम्** - மங்களகரமான; **रत्नासनम्** - இரத்தினங்களிழைத்த ஆஸநமும்; **कुङ्कुम - चन्दन-आदि-भरितैः** - குங்குமம், சந்தனம், முதலியவைகள் நிரம்பிய; **जलैः** - ஜலங்களினால்; **पाद्यम्** - பாத்யமும்; **सरत्नाक्षतैः** - இரத்தினங்கள், அக்ஷதைகள் இவைகளோடு கூடிய ஜலங்களைக் கொண்டு; **अर्घ्यम्** - அர்க்யமும்; **शुद्धैः** - பரிசுத்தம் வாய்ந்த; **जलैः** - ஜலங்களினால்; **आचमनीयकम्** - ஆசமநீயமும்; **भक्त्या** - பக்தியோடு கூட; **मया** - என்றால்; **कल्पितम्** - அமைக்கப்பெற்ற; **तत् अखिलम्** - அவை யாவும்; **तव** - உன்னுடை, **संतुष्टये** - ஸந்தோஷத்தின் பொருட்டு; **कल्पताम्** - அமைவதாக.

(பொ-ரை) கருணையின் நிறைவிற்கு உறைவிடமாய் விளக்கும் அமுதக்கடலே போன்று விளங்கும் ஓ அன்னையே! ஈசானன் முதலிய நால்வர்களையும் நான்கு கால்களாகக் கொண்டு, மங்கள வடிவாம் ஸதாசிவனைப் முக்கியமான பலகையாகவும் கொண்டு, மங்களகரமான இரத்தினஸனத்தில் அமர்ந்திருக்கும் உனக்கு, குங்குமம், சந்தனம் முதலியவைகள் நிறைந்த நறுமணம் கமழும் ஜலத்தினால் அர்க்யமும், பரிசுத்தமான ஜலத்தினால் ஆசமனீயமும் பக்தியோடு கூட என்னால் உனது மகிழ்ச்சியின் பொருட்டு ஸமர்ப்பணம் செய்யப் பெற்றுள்ளது, இவைகளை ஏற்றுக் கொள்வாயாக.

(வி-ரை) சுதைக்கடல் எவ்விதம் அமுதம் நிறைந்து காணப்பெறுகின்றதோ; அவ்விதம் கருணை நிறைந்து

திவ்யமங்கள விக்ரஹமாகக் காக்ஷியளிக்கின்ற ஓ அன்னையே! ப்ரஹ்மன், விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன் என்ற நால்வரும் உனது திருமேனிக்குரிய (திருவடிக்குரிய) நான்கு கால்களாகவும், ஸதாசிவன் பலகையாகவும் அமையப்பெற்ற காந்தியுடனிலங்கும் அழகிய இரத்தினங்களிழைத்த ஆஸநம் என்னுல் ஸமர்ப்பணம் செய்யப் பெறறுள்ளது. இது மாத்திரமல்ல மற்றும் குங்குமம், சந்தனம், பச்சைக் கற்பூரம் முதலான நறுமணம் கமழும் வாஸனை திரவியங்களோடு கூடிய ஜலத்தால் பாத்யமும்; நவரத்நங்களோடும், அக்ஷதைகளோடும் கூடிய ஜலம் கொண்டு அர்க்யமும், சுத்தஜலத்தால் ஆசமநமும் என்னுல் ஸமர்ப்பணம் செய்யப் பெற்றுள்ளது. இவைகள் யாவும் கருணை வள்ளலும், தொழும்பர்களிடத்தில் வாத்ஸல்யம் கொண்டுள்ளதுமான உனது திருவடியினுடைய மகிழ்ச்சியின் பொருட்டேயன்றே! ஆதலின் இவைகளை ஏற்றுக்கொண்டு தொழும்பனுகிய என்னையும் அனுக்ரஹம் செய்வாயாக. (3)

लक्ष्ये योगिजनस्य रक्षितजगज्जाले विशालेक्षणे
प्रालेयाम्बुपटीरकुङ्कुमलसत्कर्पूरमिश्रोदकैः।
गोक्षीरैरपि नारिकेलसलिलैः शुद्धोदकैर्मन्त्रितैः
स्नानं देवि धिया मयैतदखिलं संतुष्टये कल्पताम् ॥ ४ ॥

லக்ஷ்யே யோகிஜநஸ்ய ரக்ஷிதஜகஜ்ஜாலே
விசாலேக்ஷணே
ப்ராலேயாம்பு படீரகுங்குமலஸத் கற்பூரமிச்
ரோதகைः.
கோக்ஷீரைரபி நாரிகேளஸலிலை: சுத்தோதகைர்
மந்த்ரிதை:
ஸ்நாநம் தேவி தியா மயைததகிலம் ஸந்துஷ்டயே
கல்பதாம்.

(ப-ரை) **योगिजनस्य** - யோகி ஜனங்களுக்கு; **लक्ष्ये** - காணத்தக்கவளும்; **रक्षित-जगत् - जालम्** - காப்பாற்றப் பெற்ற உலக மக்கள் என்னும் ஸமூஹத்

தோடு கூடியவளும்; **विशाल-ईक्षणे** - விசாலமான கண் களோ கூடியவளும்; ஆன; **हे देवि** - ஓ அன்னையே! **मन्त्रितैः** - திவ்யமந்த்ரங்களால் அபிமந்த்ரணம் செய் யப்பெற்ற; **प्रालेय-अम्बु-पटीर-कुङ्कुम-लसत्-कर्पूर मिश्र-उदकैः**- பனிஜலம், சந்தனம், குங்குமம், இவைகளோடு ஒளியுடன் நறுமணம் கமழும் பச்சைக் கற்பூரம் கலந்த ஜலங்களினாலும்; **गोक्षीरैः** - பசுக்களின் பால் களினாலும்; **नारिकेल - सलिलैः** - இளநீருகளினாலும்; **शुद्ध-उदकैः** - பரிசுத்த மான ஜலங்களினாலும்; **ते** - உனக்கு; **मया** - என்னால்; **धिया** - தெளிந்த புத்தி யோடு கூட; **स्नानम्** - ஸ்நானமும், **समर्पितम्** - செய் விக்கப்படது. **तत्-अखिलम्**-இவை யாவையும்; **संतुष्टये**- உன்னுடைய மகிழ்ச்சியின் பொருட்டு; **कल्पताम्** - அமைவதாக.

இச்செய்யுளில் ஆசமநீயமளித்த பிறகு கவி அன்னையை ஸ்நானம் செய்வதற்கு எழுந்தரு ள வேண்டுகிறார்.

(பொ-ரை) மோன நிலையிலே தவம் செய்யும் யோகிகளால் காணத்தக்கவளும், உலகை ரக்ஷிப்பவளும் விசாலமான கண்களோடு கூடியவளுமான ஓ அன்னையே! மந்த்ரங்களினால் நன்கு அபிமந்த்ரணம் செய்யப்பட்ட பன்னீர், சந்தனம். குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் முதலிய வைகளால் நறுமணம் வீசுகின்ற ஜலத்தினாலும், பசுவின் பால், இளநீர், பரிசுத்தமான ஜலம் இவைகளினாலும் எனது :மதியை முன்னிட்டுக்கொண்டு (யோகி ஜனங் களுக்கே காக்ஷிவடிவமாய் நிற்பவளும், உலகத்தை ரக்ஷிப்பவளுமான அன்னையே!) உன்னுடைய ஸ்நாநத் திற்காக ஸந்நத்தம் செய்து வைத்திருக்கிறேன். மகிழ்சி யுடன் ஏற்றுக் கொள்வாயாக

(வி-ரை) "மோனமென்பது ஞானவரம்பு" என்பது பழமொழி. அதற்கிணங்க பொறிகளை புறத்தே திரிய வொட்டாது அகத்தே நிலைக்கச் செய்து, மனதை ஒருமுகப்படுத்தி ஈசன்பால் செலுத்தி இரவும் பகலும் த்யாநம் செய்பவர்களே யோகிகள். ஆகவே இத்தகைய சீலர்களுக்கே காகஷி வடிவமாகத் தோன்றுகின்ற அன்னை மற்றவர்களுக்குப் புலனுவது கடினம் என்பது கருத்து.

(2) மற்றும் பன்னீர், சந்தனம், குங்குமம், பச்சைக் கற்பூரம், பசுவின்பால், இளநீர், கங்கைநீர், சுத்த ஜலங்கள் இவை போன்றவைகள் யாவும் ஸ்ரீதேவியினுடைய அபிஷேகத்திற்குரிய புண்ய பதார்த்தங்களாகும். உலகத்திலே ஒன்றிய தனவந்தர்களாலேயே இவைகளையெல்லாம் சேகரிக்கவும் முடியும் என்றால் இந்த திரவியங்களைக் கொண்டு உன்னை என்னால் எவ்விதம் ஸ்நாநம் செய்து வைக்க முடியும்?

(3) ஆயினும் வெளிப்படையாகச் செய்கின்ற அந்த செல்வவந்தர்களுக்கு மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாத ஸ்ரீதேவியைக் காண்பதுதான் எங்ஙனம்? யமம் நியமம் முதலிய யோக முறைகளையெல்லாம் விதிமுறை வழுவாது கற்றுணர்ந்து பரீசீலனம் செய்து, ப்ராணயாமம் கொண்டு சரீரம், இந்திரியம், மனம் இவைகளைத் தூய்மையாகச் செய்து, ஸகல விஷயவாஸனைகளிலிருந்தும் மனதைத் திருப்பி அசைவற்ற பக்தியோடு கூடிய அந்த மனதோடு, தானும், ஸ்ரீதேவியும் ஒன்றே என்ற பாவனையைக் கடைப்பிடித்து இடைவிடாது தியானம் செயகின்ற புண்யசீலர்களான யோகிகளுக்கே அன்னை காகஷிவடிவாயிருப்பவளன்றே!

(4) மேலும் ஸர்வஸங்கல்ப பரித்யாகம் செய்தவர்களான ஒன்றையும் விரும்பாத யோகிகளுக்கும் முன்பு சொல்லிய அபிஷேகத்திரவியங்கள் ஒன்றும் அவர்களிடத்தில் இல்லாததால் ஸ்ரீதேவியை விதி முறை வழுவாது எங்ஙனம் அபிஷேகம் செய்து வைக்கமுடியும்? இவ்விதம் யாவருக்கும் ஒருக்காலும் அபிஷேகம் முதலியவைகளைக்

Scanned by CamScanner

கொண்டு ஸ்ரீதேவியை பூஜை செய்ய முடியாமல் போனால் அந்த பூஜைக்குரிய ஸாமக்ரிகைகளினால் என்ன பிரயோஜனம்? உலகமாதாவாகிய அன்னையை ஆராதிக்க முடியாத நம்முடைய பிறவிதான் எவ்விதம் கடைத் தேறும்? மிகவும் சிரமமான தவம் முதலியவைகளைச் செய்து எவ்விதப் பயனைப் பெறமுடியும்? என்பன போன்ற பல கேள்விகள் எழக்கூடுமன்றே! இவைகளுக் கெல்லாம் ஒரே ஒரு ஸமாதானம்தான் உண்டு.

(5) அதாவது, தனிகர்கள் அவர்களால் இயன்ற அளவில் ஆராதனைக்குரிய வாஸனைத் திரவியங்களையெல் லாம் சேகரித்து அபிஷேகம் செய்து கொள்ளட்டும். அவர்களுக்கு தேவியினுடைய தரிசனம் ஸித்தி பெறு விட்டால், ஸங்கல்பத்தினுடைய உறுதியினால் ப்ரதிமை களிலோ, சக்ரங்களிலோ, தீபத்திலோ ஆவாஹனம் செய்து ஸ்ரீதேவியானவள் அவ்விடத்தில் நிலைத்து இருப் பதாக மனதில் ஸங்கல்பம் செய்து கொண்டு பக்தியோடு கூட ஆராதனம் செய்தால் போதுமானது. தேவியும் அவர்களிடத்தில் மிகவும் ஸந்தோஷத்துடன் அந்த பக்தர்களுக்கு ஸகல சிரேயஸையும் கொடுப்பாள். அர்ச்சனைக்குரிய ஸாமக்கிரியைகள் கைவசமில்லாத யோகிகளுக்கும் ஸ்ரீதேவியினுடைய தரிசனம் உண்டா கும் பொழுது, ஸகல விசேஷ பதார்த்தங்களைக் கொண் டும் பூஜை செய்கின்ற பாவனையைச் செய்து கொண்டு ஸங்கல்பம், பூஜை இவைகளைச் செய்துவரலாம். அவர் களுக்கு இந்த பாவனையினால் யாவும் நிறைவேறும். இவ் விதமே பாவனோபநிஷத்தும் விஸ்தாரமாகக் கூறுவ தாகும். இந்த பாவனையினுடைய விசேஷ விளக்கங்களை எமது பாவனோபநிஷத் தமிழுரையில் காணலாம்.

(6) மேலும் பாஹ்ய பூஜையைக் காட்டிலும் மாநஸிகமான ஸங்கல்பம் செய்து பண்ணுகின்ற பூஜைக் குச் சக்தி அதிகம். ஆகவே அந்த யோகிகளுக்குக் கைவல்யம் வரையிலுள்ள பலன்களின் ஸித்தியும் கைவரக்கூடும். இன்னோரன்ன பல விஷயங்களையெல் லாம் மனதிலே கொண்டு, பரமபாகவதனும், திவ்ய

Scanned by CamScanner

குருவும், மஹாயோகியுமான ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர் இவ்விடத்தில் மானஸிக பூஜையையே அவலம்பித்துள்ளதும் குறிப்பிடத் தக்கது.

(7) எனவே, யோகிகளுக்குக் காக்ஷிவடிவாய் நிற்பவள் என்பதும் கிடைக்கப்பெறும் ஆயினும் மற்றவர்களுக்கு — வெளிப்படையாக உபாஸிப்பவர்களுக்கு — காக்ஷி வடிவு கிடைக்காவிடினும், தன்னுல் படைக்கப் பெற்ற ஸகல ஜகத்தையும் ஒரே மாதிரியாக ரக்ஷிப்பவளும், விசாலமான திருநோக்குடன் கூடியவளும் ஆன ஓ அன்னையே! தெய்வத்தன்மை வாய்ந்த மந்த்ரங்களால் அபிமந்த்ரணம் செய்யப் பெற்றதும், ஹிமஜலம் சந்தனம், குங்குமம், பச்சைக் கற்பூரம் இவைகள் கலந்த நறுமணம் கமழும் ஜலமும் பசுவின் பால், இளநீர், கங்கை முதலிய புண்யதீர்த்தங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட சுத்தோதகம் இவைகளைக் கொண்டு உனது திருமேனியை விதிவழுவாது அபிஷேகத்தை, ஸங்கல்ப வடிவாயமைந்த எனது மதியின் வலிமையினுல் இதோ உனக்குச் செய்விக்கிறேன். இவைகளை மகிழ்ச்சியுடன் ஏற்று குளிர்ந்த உள்ளத்துடன் என்னையும் கடைக்கணிப்பாயாக என்பது இச் செய்யுளின் திரண்ட ஸாரமாகும். (4)

ह्रींकाराङ्कितमन्त्रलक्षिततनो हेमाचलात् संचितै
रत्नैरुज्ज्वलमुत्तरीयसहितं कौसुम्भवर्णं शुकम् ।
मुक्तासंतति यज्ञसूत्रममलं सौवर्णतन्तूद्भवं
दत्तं देवि धिया मयैतदखिलं सन्तुष्टये कल्पताम् ॥ ५ ॥

ஹ்ரீங்காங்கித மந்த்ரலக்ஷிததநோ ஹேமாசலாத் ஸஞ்சிதை:
ரத்னைருஜ்ஜ்வலமுத்தரீய ஸஹிதம் கௌஸும்ப வர்ணம்சுகம்.
முத்தாஸந்ததி யஜ்ஞஸூத்ர மமலம்ஸௌவர்ண தந்தூத்பவம்
தத்தம் தேவி தியா மயைததகிலம் ஸந்துஷ்டயே கல்பதாம் (5)

(ப-ரை) **ह्रींकार-अङ्कित-मन्त्र-लक्षित-तनो**-ஹ்ரீங்காரத் தினுல் அடையாளம் செய்யப்பெற்ற மந்த்ர வடிவாய மைந்த சரீரத்தையுடைய; **देवि** - ஓ அன்னையே! **हेमाचलात्** - மேருமலையிருந்து; **संचितैः** - சேகரிக்கப் பெற்ற; **रत्नैः** - இரத்தினங்களினுல்; **उज्ज्वलम्** - ஒளி ருகின்றதும்; **उत्तरीय-सहितम्** - உத்தரீயத்தோடு கூடி யதும் ஆன; **कौसुम्भ - वस्त्र - अंशुकम्** - பல நிறங்கள் தோயந்த அழகிய வஸ்த்ரத்தோடு கூடியதும்; **मुक्ता-सतति** - நல்முத்துக்களுடைய நிறைவோடு கூடியதும்; **अमलम्** - அழுக்கற்றதும்; **सौवर्ण-तन्तु-उद्भवम्** - ஸுவர் ணமயமான நூலில் இருந்து உண்டானதுமான; **यज्ञसूत्रम्** - யஜ்ஞோப வீதத்தை; **मया** - என்னுல்; **धिया** - புத்தியின் உதவியைக் கொண்டு; **दत्तम्** - கொடுக்கப்பட்டது; **एतत्** - இவை; **अखिलम्** - யாவும்; **संतुष्टये** - (உன்னுடைய) மகிழ்ச்சியான பொருட்டு; **कल्पताम्** - அமைவதாக.

இச்செய்யுளில் ஸ்ரீ தேவிக்கு மானஸிகமான மங்கள ஸ்னானம் செய்வித்த பிறகு, வஸ்த்ரம், யஜ்ஞோப வீதம் இவைகளைச் சாற்றுவது விளக்கப் பெறுகின்றது.

(பொ-ரை) ஹ்ரீங்காரமென்னும் மந்த்ர வடிவா யமைந்த திருமேனியுடன் விளங்கும் ஓ அன்னையே! மேருமலையிலிருந்து சேகரிக்கப் பெற்ற பலவகை இரத்தி னங்களால் ஒளிருகின்றதுமான மேலங்கியும், பல நிற வர்ணங்கள் தோய்ந்த கண்களைக் கவருகின்ற வஸ்த்ரமும் நிர்மலமான தங்கச் சரடாலான பூநூலும், நல்முத்துக் களிழைக்கப் பெற்ற பல மாலைகளும், தன்னுடைய மதி யின், உதவிகொண்டு உனது திருவடியில் ஸமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இவைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வாயாக.

Scanned by CamScanner

ஹீங்காரமென்னும் சிறந்த பீஜாக்ஷரத்தைத் தன்னிடத்திலே கொண்டு விளங்குகின்ற ஓ அன்னையே! நவரத்நங்களும், ஸுவர்ணங்களும் குவியல் குவியலாகக் கிடக்கின்ற மேருமலையிலிருந்து சேகரிக்கப் பெற்றதும், விலைமதிக்கவொண்ணுததுமான இவைகளைக் கொண்டு நிர்மாணம் செய்யப்பெற்று துலங்கும் உத்தரீயத்தோடு கூடியதும். பலநிறங்கள் தொய்ந்து செந்நிறத்துடன் பொலிவுள்ளதுமான அழகிய திவ்ய வஸ்த்ரமும் இதோ உன் எதிரில் என்னுல் ஸமர்ப்பணம் செய்யப் பெற்றுள்ளது.

இவ்விதமே ஸுவர்ணமயமான நூல் கொண்டு உண்டாக்கப் பெற்று. முத்துக்கள் கோர்க்கப் பெற்றுத் தூய்மையாகத் துலங்கும் பூனுலும் என்னுடைய ஸங்கல்ப வடிவாயமைந்த மதியின் வலிமையினுல் ஸமர்ப்பணம் செய்யப் பெற்றுள்ளது. இவைகள் யாவும் உனது மனதுக்கு உவகையுண்டுபண்ணும். ஆதலின் மகிழ்ச்சியுடன் இவைகளை ஏற்றுக் கொண்டு என்னையும் திருநோக்கு கொண்டு ரக்ஷிப்பாயாக.

हंसैरप्यतिलोभनीयगमने हारावलीमुज्ज्वलां
हिन्दोलद्युति हीर पूरिततरे हेमाङ्गदे कङ्कणे ।
मञ्जीरौ मणिकुण्डले मकुटमप्यर्धेन्दुचूडामणिं
नासामौक्तिकमङ्गलीयकटकौ काञ्चीमपि स्वीकुरु ॥६॥

ஹம்ஸைரப்யதிலோபநீயகமநே ஹாராவலீமுஜ்
ஜ்வலாம்
ஹிந்தோளத்யுதிஹீரபூரிததரே ஹேமாங்கதே
கங்கணே.
மஞ்ஜீரௌ மணிகுண்டலே மகுடமப்யர்தேந்து சூடா
மணிம்
நாஸாமௌக்திகமங்குளீய கடகௌ காஞ்சீமபி
ஸ்வீகுரு (6)

(ப-ரை) **हंसैः-अपि** - ஹம்ஸங்களினாலும்; **अति-लोभनीय गमने** - மிகவும் விரும்பப்பெற்ற நடையையுடைய ஓ அன்னையே! **उज्ज्वलाम्** - மிகுந்த ஒளியுடன் விளங்குகின்ற; **हारावलीम्** - முத்துக்களாலான மாலையையும்; **हिन्दोल द्युति-पूरिततरे** - வளைவாக நிர்மாணம் செய்யப்பட்டு வைரக்கற்கள் நிறைந்த; **हेमाङ्गदे** - தோள்வளையங்களையும்; **कङ्कणे** - கங்கணங்களையும்; **मञ्जीरौ** - காற்சிலம்புகளையும்; **मणिकुण्डले** - இரத்தினங்களான காதணிகளையும்; **इन्दु-चूडामणिम्** - பாதிமதியென்னும் சூடாமணியையும்; **मकुटम्-अपि** - மகுடத்தையும்; **नासा-मौक्तिकम्** - முத்துக்களாலான மூக்குத்தியையும்; **अङ्गुलीय-कटकौ** - மோதிரங்களையும், வளைகளையும் **काञ्चीम्-अपि** - ஒட்டியாணத்தையும்; **स्वीकुरु** - பெற்றுக் கொள்வாயாக.

இச்செய்யுளில் அன்னைக்கு வஸ்த்ரம் யஜ்ஞோபவீதம் இவைகள் அணிவித்த பிறகு இரத்தினங்களான ஆபரணங்களை அணிவிப்பதாக மானஸிகமாகக் கவி வேண்டுகிறார்.

(பொ-ரை) மாநத வாவியிலிலே வதிகின்ற அன்னப் பேடுகளும் கண்டு அதிசயிக்கத் தக்க அழகிய நடைகளையுடைய ஓ அன்னையே! எங்கும் ஒளியுடன் மிளிருகின்ற நல்முத்துக்களான மாலையையும், வைரக்கற்கள் இழைத்த தோள்வளையங்களையும், கங்கணங்களையும், காற்சிலம்புகளையும், இரத்தினங்களிழைக்கப் பெற்ற காதணிகளையும், பிறையைச் சூடிய மகுடத்தையும், நல்முத்துக்களான நாஸாமணியையும், மோதிரங்களையும், வளையல்களையும் ஒட்டியாணத்தையும் நான் எனது மனதால் கல்பனை செய்துள்ளேன், இவைகளையேற்றுக் கொள்வாயாக.

Scanned by CamScanner

(வி-ரை) மத்த மாதங்கத்தையும் (மதயானை) அன்னப்பேடையும் அவமதித்து மனதைக் கவருகின்ற அழகிய நடையையுடைய அன்னையே! ஒளிமிகுந்து விளங்குகின்ற முத்து மாலையும், வட்டவடிவாகக் காந்தியைச் சொறிகின்ற வைரங்களிழைத்து ஸுவர்ணத்தால் செய்யப்பெற்ற தோள் வளையங்களும், அவ்விதமே ஒளிருகின்ற குங்குமங்களும், காற்சிலம்புகளும். இரத்தினங்களிழைக்கப்பெற்ற காதோலைகளும், பாதிமதியென்றும் சூடாமணியோடு கூடிய அழகிய கிரீடமும், நல்முத்துக்களால் கட்டப் பெற்ற நாஸாபரணமும் (மூக்குத்தி), விரல்களிலணிந்து கொள்ளத்தக்க மோதிரங்களும, மற்றும். பல வகையாயுள்ள வளையல்களும், ஒட்டியாணமும் நான் இதோ உன்னுடைய முன்னிலையில் என்னுடைய ஸங்கல்பத்தின் பெருமிதத்தால் ஸமர்ப்பணம் செய்துள்ளேன். இவைகளை மிகுந்த ஸந்தோஷத்தோடுகூட ஏற்றுக் கொள்வாயாக. ஏற்றுக்கொண்டு உனது திருமேனியில் விளங்குகின்ற அந்த அந்த ஸ்தானங்களில் அணிந்து கொள்வாயாக.

(6)

सर्वाङ्गे घनसारकुङ्कु[1]मघन श्रीगन्धपङ्काङ्कितं
कस्तूरीतिलकं च फालफलके गोरोचनापत्रकम् ।
गण्डादर्शनमण्डले नयनोर्दिव्याञ्जनं तेऽञ्चितं
कण्ठाब्जे मृगनाभिपङ्कममलं त्वत्प्रीतये कल्पताम् ॥ ७ ॥

ஸர்வாங்கே கநஸாரகுங்குமகந ஸ்ரீ கந்தபங்காங்கிதம்
கஸ்தூரீ திலகம் ச பாலபலகே கோரோச
நாபத்ரகம் ।
கண்டாதர்சந மண்டலே நயநயோர் திவ்யாஞ்ஜ-
நம் தேऽஞ்சிதம்
கண்டாப்ஜே ம்ருகநாபிபங்கமமலம் த்வத் ப்ரீதயே
கல்பதாம் ॥ 7 ॥

---

1. रज: என்ற பாடமுமுண்டு. அப்பொழுது குங்குமப் பொடி-துகள் என்று பொருள் கொள்ள வேண்டும்.

Scanned by CamScanner

(ப-ரை) **सर्वाङ्गे** - சரீரம் முழுவதிலும்; **घनसार - कुङ्कुम - घन - श्रीगन्ध - पङ्क - अङ्कितम्** - கர்ப்பூரம், குங்குமம், அகரு, ஸரளத்ருமம், பச்சிலை, சந்தனம் இவைகள் கலந்த குருந்தொட்டிக் குழம்பினால் பூசப்பட்டதும், **फाल-फलके** - விசாலமான நெற்றியில்; **कस्तूरी - तिलकम्** - கஸ்தூரியாலான திலகமும் (பொட்டு) **गण्ड - आदर्श - मण्डले** - கண்ணாடிபோன்ற கன்னப்ரதேசத்தில்; **गोरोचना-पत्रकम्** - கோரோசனையாலாகிய பத்திக்கீறும், **ते** - உன்னுடைய; **नयनयोः** - கண்களில்; **अञ्चितम्** - தழுவப் பெற்ற (இடப்பட்ட) **दिव्य -अञ्जनम्** - ஒளியுடன் இலங்கும் மையும்; **कण्ठ - अब्जे** - சங்கு போன்ற கழுத்தில்; **अमलम्** - நிர்மலமான; **मृग-नाभि-पङ्कम्** - கஸ்தூரியாலான குழும்பும்; **त्वत्** - உன்னுடைய; **प्रीतये** - மகிழ்ச்சியின் பொருட்டு; **कल्पताम्** - அமைவதாக.

(அ-கை) இச்செய்யுளில் ஸ்ரீதேவிக்கு ஆபரணங்கள் அணிவித்தபிறகு திவ்யகந்த பரிமளங்களையும் திவ்யாஞ்ஜநத்தையும் சாற்றுவதை கவி உருவகம் செய்கிறார்:—

(பொ-ரை) பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, அகரு, ஸரளத்ருமம், பச்சிலை, சந்தனம் இவைகள் சேர்ந்த குருந்தொட்டிக் குழம்பினால் பூசப்பட்டு, நறுமணம் கமழும் சரீரமும், அகன்ற திருநுதலிலே தீட்டப்பெற்ற திலகமும், கண்ணாடிபோன்று விளங்குகின்ற கபோலங்களிலே கோரோசனையால் எழுதப்பெற்ற பத்திரிகாரேகையும், (மகரிகாரசனையும்) நீண்ட கண்களிலே தீட்டப்பெற்ற ஒளியுடன் விளங்கும் அஞ்ஜநமும், வலம்புரிச் சங்கமெனத் துலங்கும் கழுத்திலே பூசப்பெற்ற கஸ்தூரியாலான குழம்பும், உனது மகிழ்ச்சியின் பொருட்டு என்னால் ஸமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இவைகளை ஏற்றுக்கொள்வாயாக.

Scanned by CamScanner

(வி-ரை) மற்றும்,

" कुङ्कुमागरुकस्तूरी कर्पूरं चन्दनं तथा ।
महासुगन्धमित्युक्तं नामतो यक्षकर्दमः ॥ "

எனத் தன்வந்தரியும்,

" कर्पूरागरुकस्तूरी कङ्कोलघुसृणानि च ।
एकीकृतमिदं सर्वं यक्षकर्दम उच्यते ॥ "

என வியாடியும் சொல்லியுள்ளதை யநுஸரித்து, குங்குமம், அகரு, கஸ்தூரி, கற்பூரம், சந்தனம் அல்லது தக்கோலம் இந்த திரவியங்கள் ஐந்தும் கூட்டிச் சேர்த்த களபக் குழம்பை மஹாஸுகந்தம் என்றும், யக்ஷகர்தமம் எனவும் அழைக்கப்பெறும். இவ்விடத்தில் கஸ்தூரிக்குப் பதிலாக ஸரளத்ருமம் சேர்த்துச் சொல்லப் பெற்றுள்ளது.

(2) அன்னையே! உனது திருமேனியிலே இலங்கும் அவயவங்களில் பூசிக் கொள்வதற்கு, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, அகரு, ஸரளத்ருமம், சந்தனம் இவைகளைக் கொண்டு உண்டாக்கப் பெற்ற நறுமணங்கமழும் களபக் குழம்பும், விசாலமான நெற்றியிலே சாற்றிக் கொள்வ தற்குக் கஸ்தூரி பொட்டும், கண்ணழியைப் போல காந்தியுடன் விளங்குகின்ற இரு கபோலங்களிலும் கோரோசனையால் செய்யப் பெற்ற மகரிகாபத்ரரசனை யும், கருத்தடர்ந்து நீண்ட புருவங்களோடு கூடிய அழகிய கண்களில் சிறந்த திவ்யாஞ்ஜநமும், சங்கின் வனப்பை வெல்லுகின்ற கழுத்திலே நிர்மலமான கஸ்தூரிப்யாலான குழம்பும், என்னுடைய மனதால் கல்பனை செய்யப் பெற்று இதோ உன்னுடைய முன்னிலை யிலே வைத்திருக்கிறேன், உவகையுடன் இவைகளை யேற்றுக் கொண்டு, என்னையும் திருநோக்கால் அருள் வாயாக. இவைகள் யாவும் உனது மனதிற்குக் களிப்பை யுண்டு பண்ணுமென்பதில் ஐயமில்லையன்றே!

कल्हारोत्पलमल्लिकामरुवकैः सौवर्णपङ्केरुहै-
र्जातीचम्पकमालतीवकुलकैर्मन्दारकुन्दादिभिः ।

Scanned by CamScanner

केतक्या करवीरकैर्बहुविधैः कृल्पताः स्रजो मालिकाः
संकल्पेन समर्पयामि वरदे संतुष्टये गृह्यताम् ॥ ८ ॥

கல்ஹாரோத் பல மல்லிகா மருவகைஃ ஸௌவர்ண பங்கேருஹைர்
ஜாதீசம்பகமாலதீ வகுளகைர் மந்தார குந்தாதிபிஃ
கேதக்யா கரவீரகைர் பஹுவிதைஃ க்ருப்தாஃ ஸ்ரஜோ மாலிகாஃ
ஸங்கல்பேந ஸமர்பயாமி வரதே ஸந்துஷ்டயே க்ருஹ்யதாம் ॥ 8 ॥

(ப-ரை) **वरदे** - வரையாது பயன்களைக் கொடுக்கும் ஓ அன்னையே! **कल्हार - उत्पल - मल्लिका - मरुवकैः** - தாமரை, ஆம்பல், மூல்லை செங்குருத்தி என்ற புஷ்பங்களினாலும்; **सौवर्णपङ्केरुहैः** - பொற்றாமரைகளினாலும்; **जाती - चम्पक - मालती-वकुलैः** - பிச்சி, சண்பகம், இருவாக்ஷி, மகிழம்பூ என்ற புஷ்பங்களினாலும்; **मन्दार - कुन्द - आदिभिः** -மந்தாரை, குருக்கத்தி முதலிய புஷ்பங்களினாலும்; **केतक्या** - தாழம்பூவினாலும்; **कर-वीरैः** - அரளிப் புஷ்பங்களினாலும்; **बहुविधैः** - பல வகையான புஷ்பங்களினாலும்; **कल्पताः** - செய்யப்பட்ட; **स्रजः - मालिकाः** - கட்டப்பட்ட மாலைகளையும்; **संतुष्टे** - (உனது) மகிழ்ச்சியின் பொருட்டு; **समर्पयामि** - ஸமர்ப்பணம் செய்கிறேன்; **गृह्यताम्** - ஏற்றுக்கொள்வாயாக.

(அ-கை) ஸ்ரீதேவிக்கு ஆபரணங்கள் அணிவித்த பின்பு, புஷ்பங்களைக் கொண்டு அர்ச்சனை செய்வதை மஹாகவி இச்செய்யுளில் கல்பனை செய்கிறார்.

Scanned by CamScanner

(பொ-ரை) ஓ அன்னையே! சென்னிறம் பொருந்திய செங்கழுநீர்ப் புஷ்பம், ஆம்பல், முல்லை முதலிய நறுமணங் கமழும் மலர்களைக்கொண்டு அழகாகத் தொடுக்கப் பெற் றுக்கட்டிய சிறியதும் பெரியதுமாகிய மாலைகளால் சென் னியிலும், கழுத்திலும் எனது மனமொப்பிய ஸங்கல்பத் தால் உனக்கு அணிவிக்கிறேன், தொழும்பர்களிடத்தில் கருணையைப் பொழிகின்ற மஹாமாயையாம் ஓ அன்னையே! இதை மகிழ்ச்சியுடன் ஏற்று, என்னையும் அருள்வாயாக.

(வி-ரை) ஓ அன்னையே! ஸௌகந்திகம், ஆம்பல், முல்லை, செங்குருத்தி. பொற்றுமரை, பிச்சி, சண்பகம், இருவாக்ஷி. வகுளம், மந்தாரம். குருகத்தி, முல்லை தாழம்பூ அரளி இன்ரைன்ன பலவகை மலர்களால், அழகாகக் கட்டப்பட்டு நறுமணத்துடன் விளங்கும் சிறியதும், பெரியதுமான மாலைகளால் சென்னியிலும், கழுத்திலும் அணியத்தக்கதுமான மற்ற மாலைகளையும், என்னுடைய ஸங்கல்பத்தால் உனக்கு அணிவிக்கிறேன். தொழும்பர்களி_த்தில் கருணையைப் பொழிகின்ற மஹா மாயையாம் ஓ அன்னையே! உனது மகிழ்ச்சியின் பொருட்டு ஸமர்ப்பணம் செய்யப்பட்ட இவைகளை ஆதரவோடு ஏற்றுக் கொள்வாயாக! (8)

हन्तारं मदनस्य नन्दयसि यैरङ्गैरनङ्गोज्ज्वलै:
यैर्भृङ्गावलिनीलकुन्तलभरैर्बध्नासि तस्याशयम् ।
तानीमानि तवाम्ब कोमलतराण्यामोदलीलागृहा-
ण्यामोदाय दशाङ्गगुग्गुलुघृतैर्धूपैरहं धूपये ॥ ९ ॥

ஹந்தாரம் மதநஸ்ய நந்தயஸி யைரங்கைர
நங்கோஜ்வலை:
யைர் ப்ருங்காவளி நீலகுந்தள பரைர் பத்நாஸி
தஸ்யாசயம் ।

தாநீமாநி தவாம்ப கோமதராண்யாமோ
தலீலாக்ருஹா-
ண்யாமோதாய தசாங்க குக்குலுக்ருதைர் தூபை
ரஹம் தூபயே ॥ 9 ॥

(ப-ரை) **हे अम्ब** - ஓ அன்னையே! **अनङ्ग-उत्-ज्वलैः**- காமவேட்கையை யுண்டுபண்ணுகின்ற; ஒளியுடன் விளங்கும்; **अङ्गैः** - அவயவங்களினால்; **मदनस्य** - காம தேவனுடைய; **हन्तारम्** - அந்தகனாகிய சிவனை; **नन्द-यसि** - (உனது அழகிய திருமேனியால்) மகிழச் செய் கிறாய், **यैः** - எந்த, **भृङ्ग - आवली-नील-कुन्तल-भरैः** - வண் டினங்கள் போல நீல நிறமான யாதொரு கேச பாரங்களைக் கொண்டு, **तस्य** - அந்த பரமசிவனு டைய, **आशयम्** - அபிப்பிராயத்தை, **बध्नासि** - கட்டுப் படுத்துகின்றதோ, **कोमल - तरा - अपि** - மிகவும் மிருது வாயினும், **आमोद - लीला - गृहाणि** - பரிமளங்களுடைய லீலைகளின் இருப்பிடங்களான, **तानि** - அந்த, **इमानि** இந்த, (உன்னுடைய அவயவங்களை) **दश-अङ्ग-गुग्गुलु-घृतैः** - பத்து அவயங்களோடு கூடிய குக்குலு சாம்பி ராணிகளோடு கூடிய, **धूपैः** - தூபங்களினால், **आमोदाय-** எங்கும் பரவுகின்ற வாஸனையின் பொருட்டு, **अहम्** நான், **धूपये** - புகையை ஊட்டுகிறேன்.

(அ-கை) நறுமணம் கமழும் மலர்களைக் கொண்டு மாலைகள் கட்டி அன்னைக்குச் சாற்றி அர்ச்சித்த பிறகு இச்செய்யுளில் நறும்புகையூட்டுவதை கவி கல்பனை செய்கிறார்.

(பொ-ரை) அன்னையே காமாந்தகனும் கண்டு காமுறப் பெறும் வனப்புடன் விளங்கும் அழகிய உனது

திருமேனிக்கும், கருமை நிறத்துடன் பொலிவுறும் வண்டினங்களால் காமுறப் பெறறு மொய்த்த வண்ணம் கருத்தடர்த்து பொலிவுடன் விளங்கும் அக்கூந்தல்களுக்கும், பச்சைக் கற்பூரம், தசாங்கம் அகரு முதலியவைகளான வாஸனைத் திரவியங்களைக் கொண்டு நறுமணம் கமழும் புகையை யூட்டுகிறேன். அவைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு என்னை அநுக்ரஹம் செய்வாயாக.

(வி-ரை) ஓ அன்னையே! வனப்புடன் விளங்கும் உனது திருமேனியானது, அழகிற் சிறந்த காமனையழித்த அக் காமாந்தகனையும் ஆனந்தத்திலழுந்தச் செய்வதன்றே! மற்றும் வண்டினங்களுக்கு நிகரான கருத்தடர்ந்து ஒளிருகின்ற உனது கூந்தல் கூட்டங்களோ, அப் பரமசிவனுடைய மனதையும் இறுகப்பிணித்து நிற்பவையன்றே! இவைகளுக்கெல்லாம் அழகிய இருப்பிடமாகிய அப்பெருமை வாய்ந்த உனது அவயவங்களுக்கும், கேசபாசங்களுக்கும், மிகவும் மநோஹரமான பரிமளம் கமழும் பச்சைக் கற்பூரம், தசாங்கம் முதலியவைகளைக் கொண்டு நறும்புகை யூட்டுகிறேன். அன்னையே! மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வாயாக.

लक्ष्मीमुज्ज्वलयामि रत्ननिवहोद्भास्वत्तरे मन्दिरे
मालारूपविलम्बितैर्मणिमयस्तम्भेषु संभावितैः ।
चित्रैर्हाटकपत्रिकाकरधृतैर्गव्यैर्घृतैर्वर्धितैः
दिव्यैर्दीपगणैर्धिया गिरिसुते संतुष्टये कल्पताम् ॥ १० ॥

லக்ஷ்மீ முஜ்வலயாமி ரத்நநிவஹோத் பாஸ்
வத்தரே மந்திரே
மாலாரூப விலம்பிதைர் மணிமயஸ்தம்பேஷு
ஸம்பாவிதைஃ ।
சித்ரைர் ஹாரக பத்ரிகா கரத்ருதைர் கவ்யைர்
க்ருதைர் வர்த்திதைஃ
திவ்யைர் தீபகணைர்தியா கிரிஸுதே ஸந்துஷ்ட யே
கல்பதாம் ॥ 10 ॥

(ப-ரை) **गिरि-सुते** - மலையரசன் மகளாகிய ஓ அன்னையே! **रत्न-निवह-उद्-भास्वत्तरे** - இரத்தின ஸமூஹங்களைக் கொண்டு மிகவும் ஒளியுடன் விளங்கும், **मन्दिरे** - விலாஸ விடுதியில் இருக்கின்ற, **मणिमय - स्तम्भेषु** - இரத்தினமயமான தூண்களில், **माला - रूप - विलम्बितैः** - மாலை வடிவிலே தொங்கிக் கொண்டிக் கின்றவையும், **चित्रैः** - பல வர்ணங்களோடு கட்டிய வையும், **हाटक-पात्रिका-कर-धृतैः** - தங்கப்பதுமைகளால் கைகளில் தரித்துக் கொள்ளப்பட்டவையும், **गव्यैः - घृतैः** - பசுவின் ஸம்பந்தமான நெய் கொண்டு, **वर्धितैः** - வளர்க்கப்பட்டவையும், **धिया** - புத்தியினல், **संभावितैः** நன்கு பாவிக்கப்பட்டவையும், **दिव्यैः** - ஒளியுடன் விளங்குகின்றவையும் ஆன, **दीप-गणैः** - தீபஸமூஹங் களால், **लक्ष्मीम्** - சோபை யென்னும் ஸம்பத்தை, **उत्-ज्वलयामि** - ஒளிரச் செய்கிறேன். **संतुष्टये**-மகிழ்ச்சி யின் பொருட்டு, **कल्पताम्** - அமைவதாக.

(அ-கை) இச்செய்யுளில் தூபம் காட்டிய பிறகு. அன்னைக்குத் தீபம் காட்டுவதைக் கவி கல்பனை செய்கிறார்.

(பொ-ரை) பர்வதராஜனுடைய குமாரியாம் பார் வதியாகிய ஓ அன்னையே! இயற்கையாகவே பலவகை யான இரத்தினங்களுடைய குவியல்களைக் கொண்டு மிக்க ஒளியுடன் விளங்குகின்ற உன்னுடைய விலாஸ விடுதியிலிருக்கின்ற இரத்தினங்களாலான தூண்களில் மாலை மாலைகளாகக் கட்டப்பட்டதும், தங்கப்பதுமை களால் கைகளில் தரித்துக் கொள்ளப் பட்டவையும், இவ் விதம் பலவகையாயுள்ள நெய் விளக்குகளை ஏற்றிவைத்து முன்னிலும் பன்மடங்காகப் பெருகும் ஒளிகளுடைய ஸம்பத்துக்களையும் வளரச் செய்கிறேன். இவை யாவும் உனது விநோதத்தின் பொருட்டு அமைவதாக.

Scanned by CamScanner

(வி-ரை) கிரிஸுதா-கிரி-மலை, ஸுதா-பெண் எனவே மலையரசன் மகள் எனக்கிடைப்பதாகும் - ஓ அன்னையே! உனது திருமாளிகையில் இரத்தினங்களாலும், வைடூர்யங்களாலும் முத்துக்களாலும் நிரம்பப் பெற்று விளங்குகின்ற மாலை மாலையாகத் தொங்குகின்ற தூண்களும், தங்கப் பதுமைகளும் சிறப்புடன் விளங்குகின்றன. அவைகளின் ஒளியைச் சொல்லத் தரமன்று. ஆயினும் ஒன்றுக்கும் உதவாத இத்தொழும்பன் மிகுந்த பிரயாசையுடன் தன்னுடைய திருமனதால் கல்பனை செய்யப்பட்டு உனக்கு நிவேதித்த இந்த நெய் விளக்கையும் உள்ள முவந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் என்னுடைய ஜன்ம ஸாபல்யம் அப்பொழுதான் நிறைவேறும். ஆதலின் இதனை ஏற்றுத் தொழும்பனைக் கடைக் கணிப்பாயாக.

(10)

ह्रींकारेश्वरि तप्तहाटककृतैः स्थालीसहस्रैर्भृतं
दिव्यान्नं घृतसूपशाकभरितं चित्रान्नभेदं तथा ।
दुग्धान्नं मधुशर्करादधियुतं माणिक्यपात्रे स्थितं
माषापूपसहस्रसम्च सफलं नैवेद्यमावेदये ॥ ११ ॥

ஹ்ரீங்காரேச்வரி தப்த ஹாடகக்ருதைः ஸ்தாலீ
ஸஹஸ்ரைர் ப்ருதம்
திவ்யாந்நம் க்ருதஸூபசாகபரிதம் சித்ராந்ந
பேதம் ததா ।
துக்தாந்நம் மது சர்க்கராததியுதம் மாணிக்ய
பாத்ரேஸ்திதம்
மாஷாபூப ஸஹஸ்ரமம்ப ஸபலம் நைவேத்ய
மாவேதயே ॥ 11 ॥

(ப-ரை) **ह्रीं कार - ईश्वरि** - ஹ்ரீங்காரம் என்றுமந்த்ராக்ஷரத்திற்குத் தலைவியாய, **अम्ब** - ஓ அன்னையே! **तप्त-हाटक कृतैः** - உருக்கிய தங்கத்தினால் செய்யப்பட்ட,

स्थाली-सहस्रैः - ஸ்தாலிகளுடைய ஆயிரங்களில், **भृतम्** - நிறைந்ததும், **घृत - सूप - शाक - भरितम्** - நெய், பருப்பு, பதார்த்தங்கள் இவைகள் நிறைந்ததுமான, **दिव्यान्नम्** - ருசியுள்ள அன்னமும், **तथा** - அவ்விதமே, **चित्र-अन्न-भेदम्** - சித்ரான்ன வகைகளும், **मधु - शर्करा - दधि-युतम्** - தேன், சர்க்கரை, தயிர் இவைகளோடு கூடியதும், **दुग्ध-अन्नम्** - பாலாலாகிய பாயஸமும், **माणिक्य-पात्रे** - மாணிக்கமயமான பாத்திரத்தில், **स्थितम्** - இருக்கின்றதும், **सफलम्** - பழவர்கங்களோடு கூடியதும், **माष-अपूप-सहस्रम्** - உளுந்தாலாகிய வடைகள் ஆயிரமும், ஆன, **नैवेद्यम्** - நைவேத்யத்தை, **आवेदये** - நிவேதனம் செய்கிறேன்.

(அ-கை) இச்செய்யுளில் அன்னைக்குத் தீபம் காட்டிய பிறகு, மணமும் சுவையும் கொண்ட பலவகைப் பக்ஷணங்களையும், சால்யான்னங்களையும், தம் மனதால் கவி கல்பனை செய்து அன்னைக்கு நிவேதனம் செய்கிறார்.

(பொ-ரை) ஹ்ரீங்காரத்தினுடைய ஸாரவடிவாம் அந்த திவ்ய மந்த்ரத்திற்குத் தலைவியாயுள்ள ஓ அன்னையே! ஆயிரம் ஆயிரங்களான ஸ்வர்ணஸ்தாலிகளில் சமையல் செய்து நிறைத்து வைக்கப்பட்டதும், நெய், பருப்பு, காய்கறிகள், முதலியவைகளோடு கூடியதுமான திவ்யான்னத்தையும், அவ்விதமே! பலவகையான சித்திரான்னங்களையும், தேன், சர்க்கரை, தயிர் இவைகளோடு பாலாலான பாயஸத்தையும், மாணிக்க கற்கள் இழைத்த பாத்திரத்திலே பலவகையான பழவர்ஙகளையும், அவ்விதமே ஆயிரம் உளுந்து வடைகளையும் நைவேத்யமாக உனது சேவடிகளில் ஸமர்ப்பணம் செய்கிறேன் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வாயாக.

(வி-ரை) இவ்விடத்தில் மஹாமாயையாம் அன்னை ஹ்ரீங்காரத்தின் ஸாரவடிவாயிருப்பவள் என்னும் கருத்

தமைத்து ஹ்ரீங்காரம் என்னும் மந்த்ரத்திற்குத் தலைவி என்று வெளிவேற்றுமை (ஸம்போதனம்) கொண்டு கவி அழைக்கிறார். ஹ்ரீங்காரம் என்னும் மஹாமந்த்ர பீஜத் திற்குத் தலைவி என்றும் இவ்விடம் கூறப்பட்டுள்ளது. அதாவது ஹ்ருல்லேகா என்பதே ஹ்ரீங்காரம். ஹ்ருதி மனதில்-லேகா-கோடு-போல எப்பொழுதும் விளங்குவது என்பது கருத்து.

இந்த 'ஹ்ரீம்' என்ற சொல்லானது நான்கு அவயவங் களைக் கொண்டு விளங்குவதாகும். ஹ-ர-ஈ-ம் என்பன அவை. அவைகளில் ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் என்ற மூன்று சரீரங்களையும், அவைகளுடைய சேர்க்கை யையும் சுட்டிக்காட்டி நிற்பவையுமாகும். ஆகாச பீஜ மான ஹகாரம், ஆகாசம் முதலிய ஐம்பெரும் பூதங் களின் வடிவான ஸ்தூல சரீரத்தையும், அக்னி பீஜமான ரகாரம் தேஜோ வடிவாயமைந்த ஞானேந்திரியங்களு டைய ஸமஷ்டியாகிய ஸூக்ஷ்ம சரீரத்தையும், காம பீஜ மாகிய ஈகாரமானது அவித்யானந்த வடிவான காரண சரீரத்தையும், பிந்து வடிவான மகரமானது முன்புள்ள மூன்று பீஜங்களையும் ஒன்று சேர்த்து அந்தர்யாமியாக வும் இருந்து கொண்டு ஸ்தூல வடிவாகவும் இருப்பதா கும். மற்ற விவரமான விளங்கங்களை எமது ஸ்ரீவித்யா 'மந்த்ரவிளக்கம்' என்னும் நூலில் விஸ்தாரமாகக் காண லாம்.

மற்றும், இந்த ஸ்தவத்தையியற்றிய ஆசிரியர், திரிசதியிலே வழங்கப் பெற்ற ஹ்ரீங்காரிணீ, ஹ்ரீங்கார மூர்த்தி:, என்ற இரண்டு நாமாக்களையும் மனதிலே கொண்டு இவ்விடத்திலும் ஹ்ரீங்காரத்திற்குத் தலைவி என்றும் சுட்டிக் காட்டுகிறார். தவிர, அந்த திரிசதிக்கும் சிறந்ததோர் உரை வகுத்துள்ளார். எனவே அன்னை யானவள் ஹ்ரீங்காரம் என்னும் மஹாமந்த்ரத்திற்குத் தலைவியாயிருப்பவள் எனவும் வர்ணிக்கிறார்.

மற்றும், இச்செய்யுளில் ஒரே தேவிக்குப் பலவகை யான பக்ஷ்ய வகைகள் பலவற்றைப் படைப்பது எங்ஙனம் பொருந்தும்? அவைகளை எவ்விதம் ஏற்க முடியும்? அவளோ எப்பொழுதும் திருப்தியுடனிருப்பவள்.

Scanned by CamScanner

அவளுக்குத் தேவையென்பது ஒன்றும் கிடையாதல்லவா? எனவே உலக வடிவாயமைந்த அன்னைக்கு இவைகள் எதற்காகவோ? என்பன போன்ற ஐயங்கள் ஒரு சிலருக்கு உண்டாகலாம், அதற்கு ஸமாதானம் வருமாறு.

ஸ்ரீதேவி ஒருவளேயாயினும், பக்தர்களின் மனதின் பரிபக்குவத்திற்கு உகந்த வகையிலே பல வடிவங்களையெடுக்கும் திறமை வாய்ந்தவள் என்பதை நமது வேதங்களும், புராணங்களும், இதிஹாஸங்களும் பறை சாற்றுகின்றன. விசேஷமாக மார்க்கண்டேயபுராணத்தில் நடுநாயகமாக விளங்கும் தேவீமஹாத்மியத்தில் எத்துணை வடிவங்களை அன்னையெடுத்தாள் என்பது அதைப்படிப்பவர்களுக்கு நன்கு புலனாகும். பக்தர்களைத் தடுத்தாட் கொள்ள பல்வேறு அவதாரங்கள் எடுத்த வரலாறுகளையும் நமது புராணங்களில் பரக்கக் காணலாம். இவையாவும் விக்ரஹங்களேயாகுமன்றே; விக்ரஹம்-சரீரம்-உருவம் மற்ற விரிவான விஷயங்களை எமது தேவீ மஹாத்ம்யத்தின் தமிழுரையில் பரக்கக் காணலாம்.

எனவே, விக்ரஹம் என்பது பக்தர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கிய அன்னை குறிப்பிட்ட இடத்தில் வலுவில் வந்து தோன்றி நின்று வஸிப்பதற்கேற்றதாயுள்ள ஒரு உருவமாகும் என்பதும் கிடைப்பதாகும். அவ்வுருவத்தில் அன்னையிருப்பதாக உறுதியுள்ள மனப்பான்மையுடன் பூஜித்து வருவதையே 'விக்ரஹாராதநம்' எனச் சொல்லப் பெறுவது.

தன்னையும் விக்ரஹத்தையும் ஒன்றுபடுத்தி இரவும் பகலும் பூஜை செய்து வருவதும், தன்மனதுக்குகந்த வகையிலே புஷ்பங்களால் மாலைகள் பலவகை நைவேத்யங்கள் முதலியவைகளைச் செய்வித்து உள்ளங்குவியக் கனிந்துருகி அன்னையை வேண்டுவதும் நமது நாட்டில் தொன்று தொட்ட மரபாகும். இக்கொள்கையைக் கண்டு நகைக்கின்றவர்கள் நம்மிடையேயும் வேறு மதத்தினரும் பலருண்டு. அவர்களுக்குத் தக்க சமாதானம் கூறப்புகின் நூல் பெருகி விடும்.

Scanned by CamScanner



ஆகவே, இவ்விடத்தில் ஸ்தோத்திரங்கள் பலவற்றைப் படைத்துத் துதிப்பதும் பக்தர்களுடைய மனத்துள் உறையும் அருள்வடிவாய் விளங்கும் அன்னையின் திருப்திக்கேயென்றுலும் ஒக்கும். ஆதலால் இச் செய்யுளில் ஸ்ரீசங்கரபகவத்பாதர் தாம் ஒரு துறவியாய் ஆத்மானுபூதிகை வரப்பெற்றவராயிருந்தும் ஸாதுஜனங்களும், ஜன்ம ஸாபல்யமடைய வேண்டுமெனக் கருதி இவைபோன்ற பல துதிகளை உலகுக்குச் செய்து அருளினர் போலும்.

மற்றும், ஸ்ரீதேவியினுடைய பல வடிவங்களும் நமது சரீரத்திலுள்ள ஒவ்வொரு சக்ரத்திலும், தாதுவிலும் உறைவதாகும் என நமது அநாதியான பல சாஸ்த்ரங்களிலும், உருவகப்படுத்தியுள்ளன. அவை வருமாறு—

விசுத்தி சக்ரத்திலும், த்வக் என்னும் தாதுவிலும் டாகிநீ வடிவமாகவும், அநாஹத சக்ரத்திலும், ருதிரம் முதலிய தாதுக்களிலும், ராகிணீ என்ற வடிவமாகவும், மணிபூர சக்ரத்திலும், மாம்ஸம் என்ற தாதுவிலும் யாகிநீ என்ற வடிவாகவும், ஸ்வாதிஷ்டாநத்திலும், மேதஸ் என்ற தாதுவிலும், காகிநீ என்ற வடிவாகவும்,மூலாதாரத்திலும் அஸ்தியிலும் ஸாகிநீ என்ற வடிவாகவும். ஆஜ்ஞா சக்ரத்திலும், மஜ்ஜையிலும் ஹாகிநீ என்ற வடிவாவும், ஸஹஸ்ரதள பத்மத்திலும், யாகிநீ என்ற வடிவாகவும், இருக்கின்றனள் என்பதாகும்.

இந்த தேவதைகளில், டாகிநீ என்றவளுக்கு பால் பாயஸமும், ராகிணீ என்றவளுக்கு, ஸ்நிக்தான்னமும், லாகிநீ என்றவளுக்கு வெண் பொங்கலும், ஹாகிநீ என்ற தேவிக்கு ஹரித்ரான்னமும், ஸாகிநீ என்றவளுக்கு எல்லா அன்னங்களும் முறையே மிகவும் பிரியமுள்ளவை என்பதை லலிதாஸஹஸ்ரநாமத்திலும் அதன் உரையாகிய ஸௌபாக்கிய ரத்நாகரத்திலும் விரிவாகச் சொல்லிருப்பதைக் காணலாம். ஆகவே எவ்வாவடிவாகவும், எங்கும், எப்பொருளிலும் அந்தர்யாமியாக உறைந்து வருகின்ற மஹாமாயையாம் லோகமாதாவாகிய அன்னைக்கு யாவும் ஒன்றேயென்பது ஸாரமாகும்.

Scanned by CamScanner

இச்செய்யுளில் கூறியுள்ள ஆதாரங்கள், அவைகளில் வதிகின்ற தேவதைகள், பரிவாரங்கள், த்யாநங்கள் முதலிய யாவும் எமது பவாநீ புஜங்கஸ்தவத்தில் விரிவாக விளக்கியுள்ளதால் வாசகர்கள் அங்கு கண்டு தெளிந்து கொள்ளலாம்.

सच्छायैर्वरकेतकीदलरुचा ताम्बूलवल्लीदलैः
पूगैर्भूरिगुणैः सुगन्धिमधुरैः कर्पूरखण्डोज्ज्वलैः ।
मुक्ताचूर्णविराजितैर्बहुविधैर्वक्त्राम्बुजामोदिभिः[1]
पूर्णा रत्नकलाचिका तव मुदे न्यस्ता पुरस्तादुमे ॥ १२ ॥

ஸச்சாயைர் வரகேதகீதளருசா தாம்பூல வல்லீதளைः
பூகைர் பூரிகுணைः ஸுகந்தி மதுரைः கற்பூரகண்
டோஜ்ஜ்வலைः ।
முக்தாசூர்ண விராஜிதைர் பஹுவிதைர் வக்த்
ராம் புஜாமோதிபிः
பூர்ண ரத்நகலாசிகா தவ முதே ந்யஸ்தா
புரஸ்தாதுமே ॥ 12 ॥

(ப-ரை) **हे उमे** - ஓ அன்னையே ! **वर - केतकी - दल - रुचा - सच्छायै** - சிறந்த தாழம்பூவின் இதழ்களுடைய (மடல்) காந்தி போன்ற காந்தியோடு கட்டியதாயும், **ताम्बूल - वल्लीदलैः** - வெற்றிலைத் தளிர்களைக்கொண்டு, **भूरि-गुणैः** - பெருகிய குணங்களோடு கூடியவையும், **सुगन्धि-मधुरैः** - நறுமணத்துடன் மநோஹரமாயிருப் பவையும், **कर्पूर - खण्ड - उज्ज्वलैः** - கற்பூரத்துண்டு களால் ஒளிமிக்கவையும், **मुक्ता-चूर्ण-विराजितैः** - முத்துப் போன்ற வெண்மைநிறமான சுண்ணத்தினால் பிர

1. मोदनैः मुद्रितकोशपाठः

காசமாயிருப்பவைவும், **बहुविधैः** - பலவகையாயிருப்பவையும், **षड्वक्त्र - अम्बुज - आमोदिभिः** - முகமென்னும் தாமரை மலருக்கு நறுமணத்தை யூட்டுபவையும், ஆன, **पूगैः** - வெற்றிலைகளைக் கொண்டு, **पूर्णम्** - நிரம்பியதான, **रत्न-कलाञ्चिका** - இரத்தினங்களிழைத்த வெற்றிலைத்தட்டும், **तव** - உன்னுடைய, **मुदे**-மகிழ்ச்சியின் பொருட்டு, **न्यस्ता** - (என்னால்) வைக்கப்பட்டுள்ளது. (இதை ஏற்றுக் கொள்வாயாக)

(அ-கை) இச்செய்யுளில் நைவேத்யம் செய்தபிறகு கவி அன்னைக்குத் தாம்பூலத்தை நிவேதனம் செய்கிறார்—

(பொ-ரை) ஓ அன்னையே! சிறந்த தாழம்பூவின் இளமையான துளிரை போன்ற சோபைக்கு நிகரான சோபையோடு கூடியவையும், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, ஏலக்காய், லவங்கம் முதலியவைகள் கலந்த காரணத்தால் நறுமணத்துடனும், நறுஞ்சுவையுடனும் கூடிய பச்சைக் கற்பூரத்துடைய துணுக்குகளால் ஒளியுடனும் கூடியவைகளாயிருப்பவையும், நறுமணச் சுண்ணம் கொண்டு விளங்குவதும், தாமரைமலர் போன்ற உனது திருமுகத்திற்கு மட்டற்ற நறுமணத்தையூட்டுவதுமான வெற்றிலைப் பாக்குகளைக் தொண்டு நிரப்பப் பெற்றுள்ள இரத்தினங்களிழைத்த தங்கத்தட்டும், உனது திருவடித் தாமரையின் மகிழ்ச்சியின் பொருட்டு இதோ உன்னுடைய எதிரில் ஸமர்ப்பணம் செய்கிறேன். உனது மனதிற்கு உகந்தவகையிலே இவைகளை ஏற்றுக் கொள்வாயாக.

(வி-ரை) அன்னையே! தாழைமலரினுடைய இளந்தளிரின் சோபைக்கு நிகரான சோபையோடு கூட பசுமையுடன் தளதளவெனத் திகழும் வெற்றிலைகளோடு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, ஏலக்காய், கிராம்பு, வால்மிளகு முதலிய நறுமணம் கமழும் வஸ்துக்கள் கலந்துள்ளதால் மாதுர்யம் நிறைந்துள்ளதும், பச்சைக்

Scanned by CamScanner

கற்பூரத்துகளால ஒளியுடன விளங்குகின்றதும், அதோடு கூடிய முக்தாசூர்ணம் கொண்டு விளங்குதும், வதநாரவிந்தத்திற்கு மிகுந்த வாஸனையை யூட்டுவது மாய தாம்பூலங்களைக் கொணடு நிறைந்துள்ளதான இரத்தினங்கள் இழைத்துள்ள தங்கத்தட்டும், உனதுதிரு வடியின் மகிழ்ச்சியின் பொருட்டு இதோ உன்னெதிரில் வைத்துள்ளேன். ஆகையினல் உனது விருப்பம் போல் தாம்பூலத்தை யெடுத்துச் சுவைத்து ஆனந்த வெள்ளத் தில் திளைத்துக் கொண்டு, தொழும்பனுகிய என்னையும் அநுக்ரஹம் செய்வாயாக என்பது ஸாரம். (12)

कन्याभिः कमनीयकान्तिभिरलंकारामलारार्तिका-
पात्रे मौक्तिकचित्रपङ्क्तिविलसत्कर्पूरदीपालिभिः ।
तत्तत्तालमृदङ्गगीतसहितं नृत्यत्पदाम्भोरुहं
मन्त्राराधनपूर्वकं सुविहितं नीराजनं गृह्यताम् ॥ १३ ॥

கன்யாபிஃ கமநீயகாந்தி பிரலங்காராமலாரார்த்திகா-
பாத்ரே மௌக்திக சித்ர பங்க்தி விலஸத்
கற்பூரதீ பாலிபிஃ ।
தத்தாளம்ருதங்ககீத ஸஹிதம் நிருத்யத்பதாம்-
போருஹம்
மந்த்ராராதந பூர்வகம் ஸுவிஹிதம் நீராஜநம்
க்ருஹ்யதாம் ॥ 13 ॥

(ப-ரை) **कामनीय-कन्तिभिः** - மனதைக்கவருகின்ற காந்தியோடு கூடிய, **कन्याभिः** - கன்னிகைகளினல், **अलंकार - अमल - आरार्तिक - पात्रे** - அலங்காரம் செய்யப் பட்டுத்தூய்மை வாய்ந்த ஆரதியெடுக்கும் பாத்திரத் தில், **मौक्तिक-चित्र-पङ्क्ति-विलसत्-कर्पूर-दीप-आलिभिः** - முத் துக்களாலான சித்திரக் கோலங்களினல் மிகவும் பிர காசிக்கின்ற கற்பூர தீபங்களுடைய ஸமூஹங்களைக்

Scanned by CamScanner

கொண்டு, **तत्तत् - ताल - मृदङ्ग - [illegible]** - அந்த அந்த தாளங்களுக்கு அநுகுணமான மிருதங்கத்வனியோடும், காநங்களோடும் கூட, **नृत्यत् - पद- अम्भोरुहम्** - நர்த்தனம் செய்து கொண்டிருக்கின்ற செந்தாமரையென்னும் சேவடிகளோடு கூடியதும், **मन्त्र - आराधन - पूर्वकम्** - மந்த்ரங்களை முன்னிட்ட ஆராதனையோடு கூடியதும், **सु-विहितम्** - முறைப்படி நன்கு செய்யப்பட்டதான, **नीराजनम्**-கற்பூரத்தை, **गृह्यताम्** - ஏற்றுக் கொள்வாயாக.

இச்செய்யுளில் தாம்பூலம் நிவேதனம் செய்த பிறகு பல தேவகன்னியர்களைக் கொண்டு திவ்யமங்கள ஆரதி யெடுப்பதைக் கவிகல்பனை செய்கிறார்.

(பொ-ரை) கண்டோர் மனதைக் கவருகின்ற எழிலுடன் விளங்கும் காந்தியோடு கூடிய மங்கையர்களால், அலங்காரம் செய்யப்பட்ட ஆரதீ பாத்திரத்தில் நல்முத்துக்களால் பல வகையான ரசனைகள் செய்யப்பெற்று, ஒளியுடன் இலங்கும் கற்பூரத் தீபங்களுடைய ஸமூஹங்களைக் கொண்டு, அந்த அந்த தாளங்களுக்கு ஒத்த வகையிலே, மத்தளத்வனியோடு கூடிய மேளங்களோடும், இனிய காநங்களோடும், நர்த்தனம் செய்கின்ற சேவடிகளோடும், மந்த்ரத்தை முன்னிட்டு முறைவழுவாது நன்கு செய்யப்பட்ட ஆராதனையோடு கூடியதும் ஆன என்னுடைய ஸங்கல்ப சக்தியின் உதவியினால் நிர்மாணம் செய்யப்பெற்ற இந்த நீராஜநத்தைக் கருணையுடன் ஏற்றுக் கொண்டு, தொழும்பனாகிய என்னையும் அநுக்ரஹம் செய்வாயாக.

(வி-ரை) தங்கத்தாம்பாளத்தில் குங்குமப்பூ, சந்தனம் இவைகளைக் கொண்டு கரைத்து வைத்த

Scanned by CamScanner

ஆதியின [illegible] த்துக்களாலான சித்திர ரசனைகளால் ஒளியுடன் விளங்கும் கற்பூர தீபங்களை ஏற்றி உனது திருவடிச் சன்னிதியிலே, தாளம், மிருதங்கம், மேளம், முதலியவைகளோடு கூடிய இன்னிசையுடன் பலவகை நிருத்யங்களோடும், மந்த்ர பூர்வமான ஆராதனத்தோடும் கூடிய என்னுடைய இந்த உபசாரத்தை ஏற்றுக் கொள்வாயாக என்பது ஸாரம். (13)

लक्ष्मीर्मौक्तिकलक्षकल्पितसितच्छत्रं तु धत्ते रसा-
दिन्द्राणी च रतिश्च चामरवरे धत्ते स्वयं भारती ।
वीणामेणविलोचनाः सुमनसां नृत्यन्ति सद्रागवत्[1]-
भावैराङ्गिकसात्त्विकैः स्फुटरसं मातस्तदालोक्यताम्[2] ॥ १४ ॥

லக்ஷ்மீர் மௌக்திக லக்ஷகல்பித ஸிதச்சத்ரம் து தத்தே ரஸா-
திந்திராணீ ச ரதிஶ்ச சாமரவரே தத்தே ஸ்வயம் பாரதீ ।
வீணுமேணவிலோசநாஃ ஸுமநஸாம் ந்ருத்யந்தி ஸத்ராகவத்
பாவைராங்கிக ஸாத்விகைஃ ஸ்புடரஸம் மாதஸ்ததா-
லோக்யதாம் ॥ 14 ॥

(ப-ரை) **लक्ष्मीः** - லக்ஷ்மீதேவீ, **रसात्** - ப்ரீதியினால், **मौक्तिक-लक्ष-कल्पित - सित - च्छत्रम्** - நல்முத்துக்கள் லக்ஷக்கணக்காக இழைக்கப்பட்ட வெண்குடையை, **धत्ते**-தரித்துக் கொண்டிருக்கின்றாள், **तु**-அவ்விதமே, **इन्द्राणी-च**-இந்த்ராணியும் **रति-च** ரதியும்,

---

1. तद्रागवत् इति मुद्रितकोशपाठः
2. तदाकर्ण्यताम् इति मुद्रितकोश पाठः

Scanned by CamScanner

चामर-वरे - சிறந்த வெண் சாமரங்கள் இரண்டையும், **(दधाते** - தரித்துக் கொண்டிருக்கின்றனர்.) **भारती** - பாரதீ தேவீ, **स्वयम्** - தானுகவே, **वीणाम्** - வீணையை, **धत्ते** - தரித்துக் கொண்டிருக்கின்றாள், **सुमनसाम्** - தேவர்களுடைய, **पण - विलोचनाः** - பெண்மானின் கண்களைப் போன்ற கண்களோடு கூடிய ஸுந்தரிகள், **सद्-रागवद्-भावैः** - நிறைந்த ஆவலோடு கூடிய பாவங்களைக் கொண்டு, **आङ्गिक-सात्त्विकैः** - அங்கஸம்பந்தமானதும், பாவஸம்பந்தமானதுமான அபிநயங்களினாலும், **स्फुट-रसम्**- தெளிந்த சுவை (ரஸம்) யுள்ளதாக, **नृत्यन्ति** - நர்த்தனம் செய்கின்றனர், **हे मातः** - ஓ அன்னையே! **तत्** - அச்சிறந்த அபிநயத்தை, **आलोक्यताम्** - காண்பாயாக.

ஸ்ரீ தேவியை திவ்யமங்கள ஆரதியால் ஆராதித்த பிறகு, தேவகன்னியர்களைக் கொண்டு திருச்சன்னிதியில் இன்னிசைகளோடு கூட திவ்ய நிருத்தங்களைச் செய்விப்பதாக இச்செய்யுளில் கவி கல்பனை செய்கிறார்.

(பொ-ரை) ஓ அன்னையே! இதோ இந்த லக்ஷ்மீ தேவியானவள் மிகுந்த மகிழ்ச்சியுடன் உனது சேவடிக்கு லக்ஷக்கணக்கான நல்முத்துக்களால் அலங்கரிக்கப்பெற்று, மட்டற்ற ஒளியுடன் விளங்கும் வெண்பட்டாலான குடையைப் பிடித்த வண்ணமிருக்கின்றாள். அவ்விதமே இந்த்ராணியும், ரதிதேவியும், உனது திருமேனியின் இருபுறங்களிலும் நின்று கொண்டு வெண்சாமரங்களை வீசிய வண்ணமிருந்து வருகின்றனர். ஸரஸ்வதீ தேவியோ உவகை நிறைந்த உள்ளத்துடன் தானுகவே தன்னுடைய அழகிய வீணையை வாசித்த வண்ணமிருந்து

வருகின்றாள். சஞ்சலம் நிறைந்த மானின் மருண்ட கண்களே போன்ற கண்களோடு கூடிய தேவஸ்திரீகள் யாவரும் அச்சமயம் உனது திருவடியின் முன்பு மிகவும் பிரியத்துடன் ரதி, ஹாஸம் முதலிய பாவங்கள் நிறைந்த, ஆங்கிகம், ஸாத்விகம், என்ற அபிநயங்களைக் கொண்டு சிருங்காரம் முதலான ஒவ்வொரு ரஸத்தையும் மிகவும் தெளிவாக விளங்குமாறு நர்த்தனம் செய்து கொண்டிருக்கின்றனர். ஓ அன்னையே! உனது திருக்கண்களால் அவைகளைக் கடைக்கணித்து என்னையும் அநுக்ரஹம் செய்வாயாக.

(வி-ரை) திருமகள் உவகையுடன் நல்முத்துக்கள் கோர்க்கப்பட்ட வெண்பட்டாலான குடையை பிடித்த வண்ணமிருக்கிறாள், அவ்விதமே இந்த்ராணியும், ரதிதேவியும் அழகிய இரண்டு வெண்சாமரத்தையும் வீசிக்கொண்டு மிருக்கின்றனர். நாமகளோ, உள்ளம் நிறைந்த உவகையுடன் தனது வீணையை வாசித்து உன்னை மகிழ்வுறுமாறு செய்து கொண்டிருக்கிறாள். அழகிய நீண்ட புருவங்களோடு செவ்வரி பரந்து சஞ்சலத்துடன் இலங்கும் கண்களோடு கூடிய தேவகன்னியர்கள் நவரஸங்கள் நிறைந்த அபிநயங்களால் உன்னை ஆனந்தமடையச் செய்கின்றனர். அன்னையின் திருச்சன்னிதியில் தொழும்பலாகிய என்னுடைய மனதால் நிர்மாணம் செய்து உருவாக்கி ஸமர்ப்பணம் செய்துள்ளேன். இவைகளை அன்புடன் ஏற்று, என்னையும் உனது திருநோக்கால் கடைக்கணிப்பாயாக என்பது ஸாரம்.

இச்செய்யுளில் வீணை, நிருத்யம், தாளம், பாவம், ஆங்கிகம், ஸாத்விகம் முதலிய பதங்களை வழங்கியிருப்பது கவனிக்கத் தக்கதாகும், வீணை - இது ஒரு வாத்ய விசேஷம். நிருத்யம்; இது ரஸபாவங்களுடன் அபிநயித்தல். தாளம்; இது நூற்றெட்டு வகையுடை

யது. **பாவம்**; இது மனிதனுடைய விசேஷமான செய்கைகள். அதாவது கழுத்து, புருவம், கண் முதலிய அவயவங்களுடைய அசைப்பினல் தோன்றுவதாகும், அது ஐவகையாகும். **அநுபாவம், விபாவம், ஸாத்விகம், வியபிசாரி, ஸ்தாயீ** என்பன அவை. இவைகளில் **பாவ** மென்மது — ஸுகதுக்கங்கள் போன்ற நிலைகளால் உண்டாக்கப்பட்டு அந்நிலைகளை உணரும் தன்மையாகும்.

2. **விபாவம்**; பாவங்களை உணர்வதனலே அவற்றின் வளர்ச்சிக்குக் காரணமாக விருப்பது. அது ஆலம்பநம், உத்தீபநம் என இரு வகைப்படும். **அநுபாவம்**; இது ஓர் உணர்ச்சியைக் குறிக்க வெளியிலே தோன்றுவதாகும். விபாவம் காரணமாகவும், அநுபாவம் காரியமாகவும் அமையும்.

3. ஆங்கிகம் இது அபிநயத்தின் ஒருவகையாகும். ஆங்கிகம், வாசிகம் ஆஹார்யம், ஸாத்விகம் என நான்கு வகையாகும். **ஆங்கிகமென்பது,** சரீரத்தின் உறுப்புக்களைக் கொண்டு செய்யப்படும் அபிநயம். **வாசிகமென்பது** வாக்கினல் செய்யப்படும் அபிநயம். **ஆஹார்ய மென்பது** அலங்காரங்களால் செய்யப்படுவதாகும். ஸத்வம் முதலிய பாவங்களை நிறைவேற்றுவதே **ஸாத்விகாபிநயம்,** அதாவது நடனபாவம் லயம் ஆகியவை. இவை நான்கும் பலவகையாகப் பிரிந்துள்ளன. அவற்றை விவரித்தால் நூல் பெருகி விடும்.

4. **ஸாத்விக பாவம்,** இது முன் சொன்னவைகளினின்றும் வேறானது. இது ஸத்வத்திலிருந்து தோன்றுவது. பாவங்களை உணர்வதற்கு இதுவே காரணம். இது எட்டு வகைப்படும். **வியபிசாரிபாவம்,** இது கடலில் தோன்றும் அலைகள் போல ஸ்தாயீவத்தில் தோன்றி அதனுடனேயே கூடி, அதனிலேயே மூழ்குவது. இது முப்பத்து மூன்று வகைப்படும். **ஸ்தாயீ**

பாவம், இது விபாவம், அநுபாவம், ஸாத்விக பாவம், வியபிசாரிபாவம், என்ற நான்கு பாவங்களினாலும் ஸுக உணர்ச்சியைக் கொடுப்பதாகும்.

5. ஆகவே நாட்டிய மென்பது-அபிநயமென்பது-அகத்துய்மை கொண்டு தெய்வத்தின் திருச்சன்னதியிலே தன்னை அத்தெய்வத்தின் திருவடிகளில் அர்ப்பணம் செய்து தானும், தெய்வமும் ஒன்றே என்ற மநப்பான்மையுடன் அத்தெய்வத்தைத், தனக்கு முன்னிலையப்படுத்திச் செய்து காட்டுவதுதான் தொன்று தொட்ட மரபாகும். இதற்குச் சான்று நால்வர் தேவாரங்களையும், ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தங்களையும், நமது பரதநாட்டிய சாஸ்த்ரத்தையும் நன்கு ஆராய்ந்தால் எத்தனை தெய்வன்மை வாய்ந்தது நாட்டியம் என்பது புலனாகும். (14)

ह्रींकारत्रयसंपुटेन मनुनोपास्ये त्रयीमौलिभि-
र्वाक्यैर्लक्ष्यतनो[1] तव स्तुतिविधौ को वा क्षमेताम्बिके ।
संलापाः स्तुतयः प्रदक्षिणशतं संचार एवास्तु ते
संवेशो नमसः सहस्रमखिलं त्वत्प्रीतये कल्पताम् ॥ १५ ॥

ஹ்ரீம்காரத்ரயஸம்புடேந மநுநோபாஸ்யே
த்ரயீமௌலிபிர்-
வாக்யைர் லக்ஷ்யதநோ தவ ஸ்துதிவிதௌகோ வா
க்ஷமேதாம்பிகே ।

---

* இந்த நாட்டிய வகைகளையும், நவ ரஸங்களின் விரிவான வரலாறுகளையும் நாட்டிய சாஸ்த்ரம், ஸங்கீத ரத்நாகரம், பரத ஸங்க்ரஹம் முதலிய நூல்களில் பார்க்கக் காணலாகும்.

1. लक्ष्यतमो इति मुद्रितकोशे.

ஸல்லாபாஃ ஸ்துதயஃ ப்ரதக்ஷிணசதம் ஸஞ்சார
ஏவாஸ்து தே
ஸம்வேசோ மநஸஃ ஸஹஸ்ரமகிலம் த்வத் ப்ரீதயே
கல்பதாம் ॥ 16 ॥

(ப-ரை) **ह्रींकार-त्रय-संपुटेन**-ஹ்ரீங்காரத்தினுடைய மூன்றுகளால் நன்கு இணைக்கப்பெற்ற **मनुना**-மந்த்ரத்தினால், **उपास्ये**-உபாஸிக்கத் தக்கவளும், **त्रयी-मौलिभिः**-வேதங்களுடைய சிரஸ்களான, **वाक्यैः** - உபநிஷதங்களினால், **लक्ष्यतनो** - காணக்கூடிய சரீரத்தையுடையவளுமான, **अम्बिके** - ஓ அன்னையே! **तव** - உன்னுடைய, **स्तुतिविधौ** - ஸ்துதி விஷயத்தில், **को - वा** - எவன்தான், **क्षमेत**-சக்தியுள்ளவன் ஆவான்? **संलापाः**-ஸம்பாஷணைகள், **ते** - உன்னுடைய, **स्तुतयः** - துதிகளாகவும், (**सन्तु** - இருக்கட்டும்) **संचारः - एव** - இஷ்டப்படி ஸஞ்சாரம் செய்வதே, **प्रदक्षिणम्** - பிரதக்ஷிணமாக (இருக்கட்டும்) **संवेशः** - நித்திரையானது, **नमसः** - நமஸ்காரங்களுடைய, **सहस्रम्** - ஆயிரமாக, **अस्तु** - இருப்பதாக. **अखिलम्** - யாவும், **त्वत्-प्रीतये** - உன்னுடைய மகிழ்ச்சியின் பொருட்டு, **कल्पताम्** - அமைவதாக.

இச்செய்யுளில் கவி தனது அஹங்காரத்தையகற்றி, துதிப்பதற்குக் கூட சக்தியில்லாத நான் உன்னிடத்தில் என்னை ஸமர்ப்பணம் செய்கிறேன் என்ற சரணாகதி தத்துவத்தை மறைமுகமாக விளக்குகிறார்.

(பொ-ரை) மூன்று ஹ்ரீங்காரங்கள் ஒன்று சேர்ந்த மந்த்ரத்தால் உபாஸிக்கத் தக்கவளும்,

Scanned by CamScanner

வேதங்களுடைய சிரோபாகமாகிய உபநிஷதங்களால் காணக் கூடிய திவ்ய மங்கள விக்ரஹத்தோடு கூடியவளுமான ஓ அன்னையே! உனது திருவடிகளின் பெருமையைத் துதிக்க எவரால் தான் முடியும்? அத்திறமை தான் எங்ஙனமுண்டாகும்? அயன், அரன் முதலிய தேவர்களுக்கும் உன்னை அறிய முடியாதெனில் என்போன்ற அல்பர்கள் எம் மாத்திரம்? ஆகவே உனது திருவடியைப் போற்றவும், வணங்கவும் நான் சக்தியற்றவனாக இருக்கின்றேன். ஆதலின் அன்னையே! என்னுடைய செயல்கள் யாவையும் யான் உனக்குச் செய்யும் பணியாகவும், மற்றவையாகவும் ஏற்றுக் கொள்வாயாக.

(வி-ரை) அன்னை உபநிஷதங்களின் ஸாரவடிவாயமைந்தவள். ஆயினும் பக்தர்களைத் தடுத்தாட் கொள்வதற்காக திவ்யமங்கள விக்ரஹத்தையும், தனது யோகமாயையினால் அடிக்கடி எடுக்கக் கூடிய திறமை வாய்ந்தவள். அன்னையினுடைய உண்மை நிலையைக் கண்டு கொள்வதானது மிகவும் சிரமமான தே. "**यस्याः स्वरूपं ब्रह्मादयो न जानन्ति** - யஸ்யாஃ ஸ்ரூபம் ப்ரஹ்மாதயோ ந ஜாநந்தி - எவளுடைய வடிவை ப்ரஹ்மன் முதலிய தேவர்களும் அறியமாட்டார்களோ! என வேதங்களுடைய சிரோரத்நமான உபநிஷதங்களே முறையிடும்பொழுது, என் போன்ற அல்ப அறிவு படைத்தவன் அறிந்து கொள்வதற்கு முடியாதன்றோ! என்ற தனது உள்ளக்கிடக்கையை அன்னையின் சேவடிகளில் கவி உறுத்திக் கொள்ளுகின்றார் என்பது கருத்து.

(1) மற்றும் இந்த ஸ்தவத்தை யியற்றிய இதே மஹாகவி தமது **ஆனந்தலஹரியினுடைய** முதற் செய்யுளிலும் இக்கருத்தமைந்தவாறு சொல்வதையும் கவனிக்கலாம்.

Scanned by CamScanner

" शिवः शक्त्या युक्तो यदि भवति शक्तः प्रभवितुं
न चेदेवं देवो न खलु कुशलः स्पन्दितुमपि ।
अतस्त्वामाराध्यां हरिहरविरिञ्चादिभिरपि
प्रणन्तुं स्तोतुं वा कथमकृतपुण्यः प्रभवति ॥ "

" சிவஃ சக்த்யா யுக்தோ யதி பவதி சக்தஃ ப்ரபவிதும்
நசே தேவம் தேவோ ந கலு குசல ஸ்பந்திதுமபி ।
அதஸ்த்வாமாராத்யாம் ஹரிஹர விரிஞ்சாதிபிரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வா கத மக்ருத புண்யஃ
ப்ரபவதி ।"

(2) இச் செய்யுளின் பொருள் வருமாறு ; அன்னையே! "சிவபெருமான் தங்களுடன் இணைந்த அளவிலேதான் சக்தியைப் பெற்ற பெருயோனகத் திகழ முடியும். இன்றேல் ஜடத்தன்மையைப் பெற்று அணுவையும் அசைக்கச் சக்தியற்றவர் ஆவரன்றே! ஆகவே அரி, அரன், அயன் முதலியவர்கள் ஏத்தித் தொழுகின்ற உன்னை ஒரு விதத்திலும் பிறவிப் பயனெய்தாத எவன்தான் வாழ்த்தவும், வணங்கவும் முடியும்? முடியாது." என்பதாகும். ஆகவே முற் பிறவிகளில் நற்கருமங்கள் செய்யாத எவனும் அன்னையைக் காண்பதரிது என்பதையும் தாமே தெரிவிக்கிறாரன்றே!

(3) ஆதலின் ஒரு விதத்திலும் தகுதியற்ற நான் இது ஒன்றுதான் உனக்குச் செய்யவியலும். அதாவது—என்னுடைய பேச்சுக்கள் யாவும், உனக்குச் செய்கின்ற துதிகளாகவும், என்னுடைய கைகளால் செய்கின்ற காரியங்கள் யாவும் உனக்குச் செய்யும் அர்ச்சனைகளாகவும், என்னுடைய நடைகள் யாவும் உனக்குச் செய்யும் பிரதக்ஷிணங்களாகவும்,

Scanned by CamScanner

என்னுடைய துயில்கள் யாவும் உனக்குச் செய்யும் நமஸ்காரங்களாவும் அமைவதாக. பின்வேறு என்ன தான் என்னால் செய்ய முடியும். என்னையே உன்னிடம் அடைக்கலமாக ஒப்படைத்தேனன்றே! ஆதலின் அன்னையே! உள்ள முவந்து கருணை நிரம்பிய கடைக்கணிப்பினால் என்னைச் சற்று நோக்குவாயாக என்பதையும் குறிப்பாக உணர்த்துகின்றார் என்பது ஸாரம்.

(4) மற்றும், இதே ஆனந்தலஹரியில் பின்வரும் செய்யுளையும் ஒப்பு நோக்குவாம்.

"जपो जल्पः शिल्पं सकलमपि मुद्राविरचना
गतिः प्रादक्षिण्य क्रमणमशनाद्याहुतिविधिः ।
प्रणामः संवेशः सुखमखिलमात्मार्पण दृशा
सपर्यापर्यायस्तव भवतु यन्मे विलसितम् ॥"

"ஜபோ ஜல்பஃ சில்பம் ஸகலமபி முத்ராவிரசநா
கதிஃ ப்ராதக்ஷிண்ய க்ரமணமசநாத்யாஹுதி விதிஃ।
ப்ரணமஃ ஸம்வேசஃ ஸுகமகிலமாத்மார்பணத்ருசா
ஸபர்யாபர்யாயஸ்தவ பவது யன்மே விலஸிதம் ॥"

ஓ அன்னையே! என் சொல்லெல்லாம் உன்னுடைய மந்த்ரங்களாகவும், கைகளுடைய செயல்கள் யாவும் உனது முத்ரைகளாகவும், என்னுடைய நடையானது ப்ரதக்ஷிணமாகவும், யான் உண்பனவெல்லாம் உனக்குச் செய்யும் ஆஹுதிகளாகவும், என்னுடைய துயில் உனக்குச் செய்யும் வணக்கமாகவும், எனது மகிழ்ச்சிகள் யாவும் நீ என் நெஞ்சை விட்டு நீங்காதிருத்தலால் உனது மகிழ்ச்சியாகவும், இவ்வாறு என்னுடைய மற்ற சேஷ்டைகள் (செயல்கள்) யாவும் உன்னுடைய உத்தம பூஜைக்குரிய சிறந்த

செயல்களாகவும் கருதி உனது சேவடியை எனது முடியின்மீது வைத்தருள்வாயாக. என்பது இச்செய்யுளின் கருத்து. மற்ற விரிவான விளக்கங்கள் யாவையும் எமது ஆனந்தலஹரியின் தமிழுரையில் கண்டு தெளிதற்பாலது.

(5) மற்றும் சிவாநந்தலஹரியிலும் இக் கருத்துக் காணப்பெறுகின்றது. அது வருமாறு—

"आत्मा त्वं गिरिजा मतिः परिजनाः प्राणाः शरीरं गृहं
पूजा ते विषयोपभोगरचना निद्रा समाधिस्थितिः ।
संचारः पदयोः प्रदक्षिणविधिः स्तोत्राणि सर्वा गिरः
यद्यत् कर्म करोति तत्तदखिलं शंभो तवाराधनम् ॥

ஆத்மா த்வம் கிரிஜாமதிஃ பரிஜநாஃ ப்ராணாஃ
சரீரம் க்ருஹம்
பூஜாதே விஷயோப போகரசநா நித்ராஸமாதி
ஸ்திதிஃ ।
ஸஞ்சாராஃ பதயோஃ ப்ரதக்ஷிண விதிஃ ஸ்தோத்
ராணி ஸர்வா கிரஃ
யத்யத் கர்ம கரோதி தத்ததகிலம் சம்போ
தவாராதநம் ॥

ஓ பரமசிவ! நீ என்னுடைய ஆத்மவடிவாய் விளங்குபவன், உமையவள் என்னுடைய மதியின் வடிவாயிருப்பவள், பரிவாரங்கள் எனது ப்ராணன்களே. என்னுடைய சரீரமே உன்னுடைய வீடு. என்னுடைய விஷய போகங்கள் யாவும் உனக்குச் செய்யும் பூஜையாகும். என்னுடைய துயிலே உன்னை நினைத்து நிற்கும் ஸமாதி நிலையாகும். எனது பாதங்களுடைய ஸஞ்சாரங்களே உனக்குச் செய்யும் பிரதக்ஷிணம். என்னுடைய சொற்கள் யாவும் உன்னைப்

Scanned by CamScanner

பற்றிய துதிகளாகும். மற்றும் என்னுடைய எந்த எந்த செய்கைகளுண்டோ அவை யாவும் ஓ மங்கள நாயக! உனக்குச் செய்யும் ஆராதனங்களன்றே!" என்பதாகும்.

(6) இங்கு ஒப்புநோக்காக விளக்கப்பெற்ற செய்யுட் கருத்துக்களை நன்கு பரிசீலனை செய்தால் உபநிஷதங்களுடைய உட்கருத்துப்புலனவதையும் வாசகர்கள் உணரலாம். இது சிறிய துதி வடிவாயமைந்த நூல் ஆதலின் அவைகளை இங்கு விமர்சனம் செய்தால் நூல் பெருகிவிடும். ஆதலின் இயன்ற அளவு ஆங்காங்கு நூல்களிலுள்ள செய்யுட்களைத் திரட்டி மேற்கோளாக விளக்கிக் காட்டப் பெற்றுள்ளது. வாசகர்கள் படித்துச் சுவைத்து இன்புறுவார்களாக. (15)

श्रीमन्त्राक्षरमालया गिरिसुतां यः पूजयेच्चेतसा
संध्यासु प्रतिवासरं सुनियतस्तस्यामलस्याचिरात् ।
चित्ताम्भोरुहमण्डपे गिरिसुता नृत्तं विधत्ते सदा[1]
वाणी वक्त्रसरोरुहे जलधिजा गेहे जगन्मङ्गला ॥ १६ ॥

ஸ்ரீமந்த்ராக்ஷரமாலயா கிரீஸுதாம் யஃ
பூஜயேச் சேதஸா
ஸந்த்யாஸு ப்ரதிவாஸரம் ஸுநியதஸ்தஸ்
யாமலஸ்யாசிராத் ।
சித்தாம்போருஹமண்டபே கிரிஸுதா
ந்ருத்தம் விதத்தே ஸதா ।
வாணீ வக்த்ரஸரோருஹே ஜலதிஜா
கேஹே ஜகன்மங்களா ॥ 16 ॥

---

1. रसाद् वाणी इति मुद्रितकोशे

(ப-ரை) **यः** - எவனொருவன் ; **सुनियतः** - மிகவும் உறுதியோடுகூட ; **प्रति-वासरम्** - தினந்தோறும் ; **संध्यासु** - ஸந்த்யாகாலங்களில் ; **श्रीमन्त्राक्षरमालया**- ஸ்ரீவித்தையென்னும் மந்த்ராக்ஷரங்களாலான மாலைகளோடு கூடிய (துதிகளால்) **गिरि-सुताम्** - மலைமகளாம் ஜகதம்பிகையை ; **चेतसा** - மனதால் ; **पूजयेत्** - பூஜைசெய்கிறானோ ; **अचिरात्** - விரைவில் ; **अमलस्य** - தூய்மையான ; **तस्य** - அவனுடைய ; **चित्त-अम्भोरुह-मण्डपे** - ஹ்ருதயமென்னும் தாமரையாகிய மண்டபத்தில் **गिरि-सुता** - பார்வதியும் ; **वक्त्र-सरोरुहे** - முகமென்னும் தாமரையில் ; **वाणी** - ஸரஸ்வதியும் ; **गेहे** - வீட்டில் ; **जगन्मङ्गला** - உலகங்களுக்கு மங்களங்களைச் செய்கின்ற ; **जलधि-जा**-ஸமுத்ரத்தில் தோன்றி மஹாலக்ஷ்மியானவள் ; **सदा** - எப்பொழுதும் ; **नृत्तम्** - நர்த்தனத்தை ; **विधत्ते** - (முறையே) செய்கின்றனர்.

(அ-கை) இவ்வாறு அன்னையைத் துதித்த பிறகு அத்துதியினால் உண்டாகும் நற்பயனை இச் செய்யுளில் கவி விளக்குகிறார்.

(பொ-ரை) ஓ அன்னையே ! யமம், நியமம் முதலியவைகள் கைவரப்பெற்ற சீலர்கள், மூன்று ஸந்த்யாகாலங்களிலும், தெய்வத்தன்மை வாய்ந்த மாத்ருகாக்ஷரங்களைக் கொண்டு தொடுக்கப் பெற்ற இந்த ஸத்வமென்னும்மணிகளாலான மாலைகளால் மலையரசன் மகளாம் பார்வதியை இடைவிடாது ஆராதனை செய்து வந்தால், அத்தொழும்பனுடைய மனம் மிகவும் பரிசுத்தமாக விளங்குவதோடு, அநந்த கல்யாண குணங்களுக்கும் உறைவிடமாகிய அன்னையின் சேவடியாம் அழியாப் பேரின்பத்தையும் அவன் முடிவில் எய்துகின்றான்.

Scanned by CamScanner

(வி-ரை) இச் செய்யுளில் **सुनियतः** - ஸுநியத:- நல்ல நியமத்தோடு கூடியவன் என்ற பொருளைக் கொண்ட ஒரு வார்த்தை காணப்படுகிறது. அதனுடைய விளக்கம் வருமாறு—ஸு என்ற சப்தமானது நன்றாக, என்ற பொருளிலே வழங்கப் பெறுவது, அவ்விதமே **नि** - நி-என்ற சொல்லானது உறுதியை உணர்த்தும். **यतः** - என்ற பதம் முயற்சி, ஒழுக்கம் முதலியவைகளைக் குறிப்பது. ஆகவே வழி வழியாக வந்துள்ள நல்ல ஆசாரத்தைக் கடைப்பிடிப்பதைச் சுட்டிகாட்டுவது என்பதும் கிடைப்பதாகும்.

(1) ஆசாரமென்பது பொதுவாக யமம், நியமம், ஆஸனம், ப்ராணயாமம், தாரணை, பிரத்யாஹாரம், த்யாநம், ஸமாதி என்ற எட்டு அங்கங்களையுடையது. இவைகளில் முதலாவதான யமமென்பது பத்துவகையாகும்.

அஹிம்ஸை - வாக்கு, காயம் என்ற மூன்று கரணங்களாலும் ஒரு காலத்திலும் எப்பிராணிக்கும் தீங்கிழைக்காதிருத்தல். இக்கருத்தையே ;

"கொல்லான் பொய்கூறான் களவிலான் என்குணன்
நல்லான் அடக்கமுடையான் நடுச் செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காம
மில்லா னியமத் திடையினின் ருளே"

எனத் திருமந்திரம் வெகு அழகாக எடுத்துரைக்கும்.

(2) ஸத்யம் — பிறருடைய நன்மையின் பொருட்டு பிரமாணங்களால் அறிந்து மனதால் நினைத்ததை வாக்கினால் சொல்லுதல். இதைக் கேட்பவன் உள்ளவாறு புரிந்து கொள்ளும்படி சொல்ல வேண்டும். அதுவன்றி வஞ்சகமும், கபடமும் கலந்து கேட்கிறவன் உள்ளபடி உணர்ந்து கொள்ளாமலிருக்கும்படி மொழிதல் ஸத்யமாகாது. உண்மையாயிருப்பதும் பிராணிகளுக்கு நன்மை பயக்கக் கூடிய மொழி மாத்திரம் ஸத்யமாகும். உண்மையாயினும் தீமை பயக்கக் கூடியவை அஸத்தியமேயாகும். ஒருகால் நன்மை பயக்கக் கூடியதான பொய்யும் ஸத்தியத்தின் பெருமையைப் பெறும்.

Scanned by CamScanner

இக் கருத்தையே கொண்ட ;

"பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்த்த நன்மை பயக்குமெனின்"

எனக்கூறுகின்ற திருக்குறளும் இங்கு கவனிக்கத் தக்கது, மற்றும்;

सत्यं ब्रूयात् प्रियं ब्रूयात् न ब्रूयात् सत्यमप्रियम् ।
प्रियं च नानृतं ब्रूयात् .... ॥

உண்மையைச் சொல்லவேண்டும், ப்ரியத்தைச் சொல்ல வேண்டும், உண்மையாயினும் பிரியமற்றதைச் சொல்லாதே, பிரிய மானதென்று பொய் பேசாதே" என்ற மனுஸ்மிருதியும் இங்கு கவனிக்கத் தக்கது.

(3) அஸ்தேயம் - களவின்மை— பலாத்காரமாகவாவது, ரஹஸ்யமாகவாவது பிறர் பொருளை கவராதிருத்தலும், அத்தன்மையான சிந்தனையைத் தவிர்த்தலும், இந்திரிய நிக்ரஹம், அல்லது ப்ரஹ்மசர்யம், பெண்களைப்பற்றிய காமனைகளைத் தவிர்த்தலுமாகிய இவையே களவின்மை யாம். பெண்களைப் பற்றிய காமனைகளாவது ஒன்பது வகையாகும் அவை—

(1) ராகத்துடன் (ஆசை) பெண்களைப் பார்த்தல் (2) ஸ்பர்சித்தல்-தொடுதல் (3) அவர்களின் வார்த்தைகளைக் கேட்டல் (4) அவர்களை நினைத்தல் (5) அவர்களைப் பற்றிப் பேசுதல் (6) அவர்களுடன் விளையாடல் (7) அவர்களுடன் பேசுதல் (8) அவர்களைப்பற்றி ஸங்கற்பித்தல் (9) அவர்களுடன் இணைவது என்பனவாம்.

(4) ப்ரஹ்மசர்யம்— ப்ரஹ்ம-வேதத்தை உத்தேசித்து, சர்யம்-நியமங்களை அநுஷ்டித்தல். வேதமோதுவதற்கு இந்திரிய நிக்ரஹம் இன்றியமையாச் சாதனமாகும். எனவே ப்ரஹ்மசர்யம் என்ற பெயர் பெற்றது. இதுவே இந்திரிய நிக்ரஹத்திற்கு உலகில் வழங்கப் பெறுகிறது.

(5) அபரிக்ரஹம்-பொருளை விரும்பாதிருத்தல் - அதாவது சரீர யாத்திரைக்கு இன்றியமையாதவைகளைத் தவிர

Scanned by CamScanner

மற்ற விஷயங்களில் பரவிருத்தியில்லாமலிருத்தல் என்பது இதன் முக்கியக் கருத்து. பொருளை ஸம்பாதித்தல் அதைப் பேணுதல், அதற்காகப் பிறரை ஹிம்ஸித்தல் இவைகளைத் தவிர்க்க வேண்டும். இவ்வைந்தும் யமத்தினுடைய அங்கங்களாகும்.

இரண்டாவது நியமமென்பது, இது ஆறு அங்கங்களையுடையது. சௌசம்-பரிசுத்தம்(தூய்மை)இதுஇருவகைத்து. ஒன்று பாஹ்ய (வெளிப்படை) சௌசம் ஜலம் முதலியவைகளால் இந்தத தூலசரீரத்தைச் சுத்தி செய்தல். இரண்டாவது-ஆந்தரசௌசம்- அகச்சுத்தம், மைத்ரீ முதிதா முதலிய நல்லபாவனைகளால் மனத்தின் மலத்தை நீக்குதல்.

(6) ஸந்தோஷம் மகிழ்ச்சி. கிடைத்ததை வைத்து திருப்தி பெறல்.

தபஸ்-தவம்-காயக்லேசத்திற்குரிய சாந்த்ராயணம் முதலிய வ்ரதங்களை அனுஷ்டித்து வருவதாகும். ஸுகம், துக்கம் என்ற இரண்டையும் பொறுத்துக் கொள்ளுதல். இந்த நியமத்தையே—

"ஆதியை வேதத்தின் அப்பொருளானைச்
சோதியை அங்கே சுடுகின்ற அங்கியை
பாதியுண் மன்னும் பராசக்தியோடுடன்
நீதி யுணர்ந்து நியமத்த னுமே
"தூய்மை அருளுண் சுருக்கம் பொறைசெவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங்களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த னுமே"

"தவஞ்செபந் சந்தோடம் ஆத்திகந் தானஞ்
சிவன்றன் விரதமே சிந்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்வீர் ஐந்து
நிவம்பல செய்யின் நியமத்த னுமே"

எனத் திருமந்திரமும் சிறப்பாகக் கூறும்.

Scanned by CamScanner

(7) ஸ்வாத்யாயம் - வேதமோதுவது. வேதத்தை யுணர்ந்து அவைகளால் கிடைக்கப் பெற்ற மந்த்ரங்களை ஜபித்தலும், உபநிஷத் முதலிய மோக்ஷசாஸ்த்ரத்தையும் ஸ்ரீகுருவின் வாயிலாக விசாரணை செய்தலுமாம்.

(8) ஈச்வரப்ரணிதாநம் - ப்ர - நன்முக நிதாநம்-வைத்தல், ஸகல காரியங்களையும் பரமகுருவான ஈச்வரனிடத்தில் அர்ப்பணம் செய்தல். இக்கருத்தையே, கண்ணனும் கீதையில் அர்ஜுனனுக்கு விளக்குவதைக் காணலாம்.

"यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत् ।
यत् तपस्यसि कौन्तेय तत् कुरुष्व मदर्पणम् ॥"

"யத்கரோஷி யதச்நாஸி யஜ்ஜுஹோஷி
ததாஸி யத் ।
யத் தபஸ்யஸி கௌந்தேய தத் குருஷ்ய
மதர்பணம் ॥"

எதைச் செய்கிறுயோ, எதையுண்கிறுயோ, எதை ஹோமம் செய்கிறுயோ, எதைக் கொடுக்கிறுயோ, எதைக் குறித்துத் தவமியற்றுகிறுயோ, ஓ குந்தியின் மகனே! அதை எனக்கு அர்ப்பணம் செய்வாயாக என்பதாகும். அல்லது பயனை விரும்பாது கர்மங்களைச் செய்தலுமாம். அதாவது,

"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।
मा कर्मफलहेतुर्भूर्मा ते सङ्गोऽस्त्वकर्मणि ॥"

"கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசந ।
மா கர்மபலஹேதுர்பூர்மா தே ஸங்கோऽஸ்த்வகர்மணி ॥

உனக்கு கர்மத்தைச் செய்யத்தான் தகுதியுண்டே தவிர அந்தக் கர்மங்களின் பயனை நுகர அநுமதியில்லை. (பிறப்பு, இறப்பு இவைகளுக்குக் காரணமாயுள்ள) கர்ம பலத்திற்குத் தகுதியாயிருக்காதே. கர்ம பலனைச் செய்யாதொழிவதில் ஆசை வைக்காதே" என்பதாகும்.

(9) மூன்றுவது ஆஸநம்-ஸ்திரமாயும்-நிலைத்தும்-ஸுகமாயும் இருத்தல். இது இருவகைத்து. ஒன்று பாஹ்யாஸநம், வஸ்த்ரம், கருப்புமான் தோல், தர்பை, கம்பளம்

முதலியன. இவற்றின் மீது சாரீர ஆஸநம், பத்மாஸநம், வீராஸநம், பத்ராஸநம், ஸ்வஸ்திகாஸநம், தண்டாஸநம் முதலியன. முந்தியவை சரீரத்திற்குப் புறம்பானவை, பிந்தியவை சரீரத்தின் உறுப்புகளைப் பலவிதமாக அமைத்துக் கொள்ளுவதால் ஏற்படுகின்றவை.

(10) நான்காவது ப்ராணயாமம்- இது ஆஸநத்தமர்ந்து ச்வாஸத்தின் போக்குவரத்துக்களை நிறுத்தலான் பிராணயாமமெனப் பெறுவது. இது பின்வரும் மநுஸ்ம்ருதியின் வசனத்தை யநுஸரித்துச் செய்தல் வேண்டும்.

"सव्याहृतिं सप्रणवां गायत्रीं शिरसा सह ।
त्रिः पठेदायतप्राणः प्राणायामः स उच्यते ॥"

"ஸவ்யாஹ்ருதிம் ஸப்ரணவாம் காயத்ரீம் சிரஸா ஸஹ।
த்ரி: படேதாயத: ப்ராண: ப்ராணயாம: ஸ உச்யதே ॥"

பிரணவத்தோடு கூடிய ஏழு வியாஹ்ருதிகள் காயத்ரீ, அதன் சிரஸ் இவைகளை மனத்தால் மும்முறை ஜபித்து, ச்வாஸத்தை நிரோதம் செய்தல் ப்ராணயாமம் என்பதாகும் என்பது இச் செய்யுளின் பொருளாகும். இந்த ப்ராணயாமமும் அந்தணர்கள் செய்ய வேண்டிய முறையாகும், ஏனையர் அவரவர்கள் இஷ்டதேவதையை தியானம் பண்ணிக் கொண்டு செய்தல் நலமாகும். இதற்குச் சான்று;

"கும்பகத்தி னுள்ளே குறித்தரனைத் தாளைக்கிற்
றும்பிபோ னிற்குந் தொடர்ந்து"

என்பது ஔவைக்குறளாகும்.

(11) ஐந்தாவது பிரத்யாஹாரம்-பிரதி-பிரதிலோமமாக-தலைகீழாக-எதிரிடையாக ஆஹாரம்-பிரவிருத்திக்கும்படி செய்தல். அதாவது இந்திரியங்களை விஷயஸம்பந்தங்களினின்று பெயர்த்து அவைகளுக்கெதிரிடையாக மனத்துடன் பொருந்தும்படி செய்தல்.

இந்திரியங்களினியல்பு விஷயங்களுடன் ஒன்றியிருத்தலாம். அச்சம்பந்தத்தை நீக்கினால் ஸத்துவத்துடன் ஸம்பந்திக்கும் தகுதியின்றி ஜடமாக இருத்தலால் மந

தோடு ஸம்பந்தப்பட்டது போல் ஆருப்பதாகும். மந திற்கு ஸத்துவத்தைக் கிரஹிக்கும் தகுதியுண்டு.

எவ்விதம் ராணித் தேனீயானது வெளிக்கிளம்ப, மற்றைத் தேனீக்கள் வெளிக்கிளம்புமாறு போல, மநம் வெளியேற இந்திரியங்கள் அதைத் தொடர்கின்றன.

திருமந்திரமும் இப்பிரத்யாஹாரத்தின் பெருமை யைப் பின் வருமாறு உருவகம் செய்துள்ளது—

ஒருக்கால் உபாதியை ஒண்சோதி தன்னைப்
பிரித்துணர் வந்த உபாதிப் பிரிவை
கரைத்துணர் வுன்னல் கரைதல்உள் நோக்கல்
பிரத்தியா காரப் பெருமைய தாமே.

என்பதாகும்.

(12) ஆருவது தாரணை- இது மனதை ஒரே இடத்தில் நிலைபெறச் செய்தல் என்பதாகும். அதாவது மனோவிருத் தியை நிறுத்தல். ஒரே விருத்தியில் இயங்கும்படி மனத்தை கட்டுப்படுத்தல் என்பதுமாகும், மற்றும்,

"கோணு மனதைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணுத்தண் டூடே வெளியுறத் தாழைக்கிக்
காணுக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணு ளடைக்கும் வழியது வாமே"

"இன்றெனக்கருளி இருள் கடிந்து
உள்ளத்திலெழுகின்ற ஞாயிறே போன்று

நின்றநின் தன்மை நினைப்பார நினைத்தேன்
நீயலாய் பிரிது மற்றின்மை"

என்ற ஸ்ரீமணிவாசகப் பெருமான் பாசுரமும் இங்கு அறியத் தக்கது, ஆகவே தாரணையென்பது நிர்விகல்பஸமாதி யென்பதும் ஒக்கும் எனக் கிடைப்பதாகும், இந்தத் தாரணையின் பெருமை திருமந்திரமும் பின்வருமாறு,

"அரித்த வுடலை ஐம்பூதத்தில் வைத்துப்
பொருத்தஐம் பூதஞ்சித் தாதியிற்போந்து
தெரிந்த மனதிசத் தாயிற் செல்ல
தரித்தது தாரணை தற்பரத் தோடே"

என விளக்கும்.

Scanned by CamScanner

(13) ஏழாவது தியாநம் - மனம் குவியப் பெற்று ஒரே விருத்தியை நாடியிருத்தல் தியாநமாகும். தியாநிக்கப் பெறும் வஸ்துவில் பிரவாஹம்போல இடையறுது மனத்தை இருக்கும்படி செய்தல் தியானம் என்பது கருத்து. இக்கருத்தைத் திருமந்திரமும் பின் வருமாறு சொல்லும் ;

" மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே"

(14) எட்டாது ஸமாதி - தியானம் செய்யும் பொழுது வஸ்து வடிவாக மாத்திரம் தோன்றுவதாயும், தியானம், தியானிக்கிறவன் என்ற இரண்டின் ஸ்வரூபமும் இல்லன போலிருப்பதாயும் நிகழ்கின்ற மனத்தின் நிலையில் ஸமாதி எனப்பெயர் பெறும். அதாவது தியானம் செய்யும் வஸ்து வினிடத்தில் மனம் லயித்திருப்பது என்பது கருத்து.

" மன்மனம் எங்குண்டு வாயுவுமங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே"

என்ற திருமந்திரமும் இங்கு உணரத் தக்கது.

(15) எனவே, இங்கு சொல்லப் பெற்ற யமம், நியமம், முதலியவை யோகமுறையை யநுஸரித்து விளக்கப் பட்டன. இம்முறைகளைத் தக்க குருவினிடம் முறைப்படி உபதேசம் பெற்று, அன்னையைத் தியானித்து காக்ஷி கண்டவர்கள் பலருளர் என்பதை ஆங்காங்கு பல நூல் களிலும் காணலாகும்.

(16) ஆயினும், அஹிம்ஸா, ஸத்யம், அஸ்தேயம் (களவின்மை) ப்ரஹ்மசர்யம், தயா, ஆர்ஜவம், க்ஷமா, த்ருதி, மிதா ஹாரம், சௌசம், இவைகள் யமமென்பர் சிலர். அவ்விதமே தபஸ், ஸந்தோஷம், ஆஸ்திக்யம், தாநம், ஈச்வர பூஜநம், ஸித்தாந்தச்ரவணம், ஹ்ரீ, மதி, ஜபம், வ்ரதம் என்பவைகளையும் நியமமென்பர்.

Scanned by CamScanner

(17) இவ்விதம் சொல்லப் பெற்ற பதத்துவகை யமங்களையும், பத்துவகை நியமங்களையும் எவனொருவன் கடைப் பிடித்து நிற்கின்றனே அவனே சீலன் ஆவன். இத்தகை சீலம் நிறைந்தவன் மூன்று ஸந்தியா காலங்களிலும் தெய்வத்தன்மை வாய்ந்த மாத்ருகாக்ஷரங்களைக் கொண்டு தொகுப்பெற்ற இந்த ஸ்தவமென்னும் மணிமாலையை உமையவளுக்கு மானஸ பூஜையாகச் சாற்றி வந்தால் வெகுவிரைவில் அவன் நினைத்த பலன்கள் யாவும் கிடைக்கப் பெற்று, மிகவும் புனிதனாகி விடுவான் அன்றே!

இக்கருத்தை, "**हृत्पुण्डरीकं विरजं विशुद्धं विचिन्त्य मध्ये विशदं विशोकम्**" — அழுக்கற்றதும், தூய்மைகொண்டதும், துக்கமற்றதும், பரவியதுமான ஹ்ருதயமென்னும் கமலத்தை நன்கு சிந்தனை செய்து" எனக் கைவல்யோபநிஷத்தும் சொல்லும்.

(18) ஆகவே அநந்தகல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாயுள்ளவளும், நிலைபெற்ற தூய்மை கொண்ட ஸம்வித்தின் வடிவாயிருப்பவளுமான லோகமாதாவான அன்னையை யுபாஸிக்கும் பக்தர்களுடைய மனமானது தியானத்தால் எங்ஙனம் தூய்மையடையும்? என்றால் பாஹ்ய - வெளிப்படையான - பூஜைகளைக் காட்டிலும் மானஸபூஜை சிறந்ததென முன்பு விளக்கப்பெற்றதால் என்க.

(19) ஆகவே, பக்தர்களுடைய மனம் மற்ற விஷயங்களிலொன்றும் பற்றுக் கொள்ளாது. அன்னையினிடத்திலேயே லயத்தையடையுமாதலால் பரிசுத்த ஹ்ருதயராக இருப்பார்கள் ஆதலின், அந்த பக்த சிரோமணிகளுடைய ஹ்ருதயகமலமென்னும் மண்டபத்தில், உலகைத் தோற்றுவிக்கும் ஸ்ரீதேவியானவள், எப்பொழுதும் நர்த்தனம் செய்தவண்ணமிருந்து வருகின்றவளன்றே;!

(20) மற்றும், ஸ்ரீதேவி எங்கு நிலைத்து வஸிக்கின்றாளோ, அங்கு ஸரஸ்வதீ, மஹாலக்ஷ்மீ இவ்விருவரும் இடைவிடாது அருகிலேயே உபசரித்தவண்ணமிருந்து வருகின்றனர் என்பதும் கிடைப்பதாகும். இதற்குச் சான்று; "**सचामररमावाणीसव्यदक्षिणसेविता** - ஸசாமர

ரமாவாணீ ஸவயத்க்ஷண ஸேவிதா-வெண்சாமரங்களோடு கூடிய ரமாதேவியும், வாணீ தேவியும் முறையே இடது பக்கத்திலும், வலது பக்கத்திலும் ஸேவித்த வண்ண மிருந்து வருகின்றனர்'' என்ற ஸ்ரீலலிதாஸஹஸ்ர நாமமாகும்.

(21) ஆகையால், அந்த பக்த சிரோமணிகளுடைய வதநாரவிந்தத்தில் மிகுந்த ஸந்தோஷத்தோடு கூட ஸரஸ்வதீ தேவியும், வீட்டில் ஜகன்மங்களவடிவாயமைந்த லக்ஷ்மீதேவியும், எப்பொழுதும் ஆநந்த தாண்டவம் செய்த வண்ணமிருந்து வருகின்றனர் என்பது கருத்து. ஸ்ரீதேவியை உபாஸிக்கின்ற சீலர்களுக்கு ஸமஸ்த வித்தைகளும், ஸகலவிதமான ஸம்பத்துக்களும், மற்றும் அவர்கள் விரும்புகின்ற பரம புருஷார்த்தமாகிய மோக்ஷஸாம்ராஜ்யமென்னும் பிறவாப் பேரின்பமாம் அந்நிலையும் ஸித்திக்குமென்பது தாத்பர்யம்.

(22) அதாவது சீலம் நிறைந்த ஸ்ரீதேவியுபாஸகர்களுக்கு இவ்வுலகில் நிறைந்திருக்கவேண்டிய ஞாநம், ஐச்வர்யம் என்ற இரண்டு ஸம்பத்துக்களும், மறுஉலகில் நிலைத்திருக்கின்ற மோக்ஷமென்னும் ஸாம்ராஜ்யமும் ஸித்திக்குமென்பதும் இச்செய்யுளின் திரண்ட ஸாரமாகும். (16)

इति गिरिवरपुत्रीपादराजीवभूषा
भुवनममलयन्ती सूक्तिसौरभ्यसारैः ।
शिवपदमकरन्दस्यन्दिनीयं निबद्धा
मदयतु कविभृङ्गान् मातृकापुष्पमाला ॥ १७ ॥

इति श्रीमदाचार्यशंकरभगवत्पादविरचित मातृकापुष्पमालास्तवः संपूर्णः

இதி கிரிவரபுத்ரீபாதராஜீவபூஷா
புவநமமலயந் தீஸூக்தி ஸௌரப்ய ஸாரை:
சிவபதமகரந்த ஸ்யந்திநீயம் நிபத்தா
மதயது கவிப்ருங்கான் மாத்ருகா புஷ்பமாலா ॥

(ப-ரை) **इति** - இவ்வாறு, **गिरि-वर-पुत्री-पाद-राजीव-भूषा** - மலையரசனுடைய சிறந்த மகளுடைய, செந்தாமரை யென்னும் அழகிய சேவடி-களுக்கு அலங்காரமாகவும், **सूक्ति-सौरभ्य-सारैः** - நல்வாக்குகள் என்னும் புஷ்பங்களுடைய நறு மணமுள்ள ஸாரங் களிலால், **भुवनम्** - உலகத்தை, **अमलयन्ती** - தூய்மை செய்வதும், **शिव-पद-मकरन्द-स्यन्दिनी** - நித்ய மங்கள வடிவாம் பரமபத மென்னும் தேனைச் சொரிந்த வண்ணமிருக்கின்றதும், **निबद्धा** (என்னால்) இயற்றப் பெற்றதுமான **इयम्**-இந்த **मातृका-पुष्पमाला**-ஸ்ரீவித்யா மந்த்ரமென்ற மாத்ருகாக்ஷரங்களாலான புஷ்ப மாலையானது, **कवि भृङ्गान्** - கவிகளென்னும் வண்டி னங்களை, **मदयतु** - மதத்தை யடையுமாறு செய்ய வதாக.

(அ-கை) இச்செய்யுளில், கவி தானியற்றிய மந்த்ரமாத்ருகா புஷ்பமாலை யென்ற இந்த ஸ்தவமானது கவிகளுக்கு ஓர் நல்விருந்தாக அமைய வேண்டுமென்ற விழைவுடன் அவர்களை நோக்கி வேண்டுகிறார்.

(பொ-ரை) இவ்விதம், மலையரசன் மகளாம் பார்வதியினுடைய செந்தாமரை போன்ற அழகிய திருவடிகளுக்கு அலங்காரமாகவும், மங்களகரமான வார்த்தைகளென்னும் மலர்களுடைய மணங்கமழும் சுவைகொண்டு, தூய்மையாக விளங்கும் நித்ய மங்கள வடிவாம் பரமபதமென்னும் மதுவைச் சொரிகின்றதும், தொழும்பனாகிய என்னால் இயற்றப்பட்டதுமான மாத்ரு காக்ஷரங்களென்னும் புஷ்பங்களாலான மாலையானது கவிக ளென்னும் வண்டுகளுக்கு (மதத்தை) மகிழ்ச்சி யுண்டு பண்ணுவதாக.

Scanned by CamScanner

(வி-ரை) இச்செய்யுளில், "मदयतु कविभृङ्गान्" — "மதயது கவி ப்ருங்கான்" — கவிகள் என்னும் வண்டுகளை மதமடையச் செய்வதாக" என உருவகம் செய்துள்ளார். அதாவது தனது வாக்கு என்னும் (செடியிலிருந்து மலர்ந்த) மந்த்ரங்களை மலர்களாகவும், இந்த ஸ்தவத்தைப் பாராயணம் செய்கின்ற பக்தர்களை வண்டுகளாகவும் உருவகம் செயதுள்ளார் என்பதாகும்.

இயற்கையாகவே, நறுமணம் கமழும் மலர்களை வண்டுகள் நாடிச் செல்வது கண்கூடு. அவ்வாறு, சுவை மிக்கதான என்னுடைய மந்த்ர மாத்ருகைகள் என்ற நறுமலர்களையும் அன்னையினுடைய பக்தியிலே தோய்ந்த மணங்கமழும் மனம் பெற்ற கவிகளென்னும் வண்டினங்கள் சுவைக்க வரவேண்டியதும் இயல்பன்றே! என்பதையும் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறார்.

ஆகவே, தொண்டான் இப்பெருமை வாய்ந்த ஷோடசாக்ஷரீ மந்த்ரங்களைத் தன்னிடத்தே கொண்டு, துதி வடிவாகத் திகழுகின்ற இம்மலர் மாலையை, தினந்தோறும் உள்ளங்கசிந்து ஒருமுகத்துடன், அன்னையின் திருவடிகள் என்னும் மலரைச் சிந்தையிலே கொண்டு துதித்து அர்பணம் செய்து வந்தால், அன்னையின் அருள் சுரக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வுலகில் ஸகலஸம்பத்துக்களையும் அடைவதோடு முடிவில் அவன் ஸ்ரீதேவீ ஸாயுஜ்யமென்னும் அழியாப் பேரின்பமாம பிறவாப் பேறும் பெறலாம் என்பதும் இந்த ஸ்தவத்தின் உறுதியான குறிக்கோளாகுப என்பதும் திரண்டஸாரமாகும். சிவம்.

இவ்விதம ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ சங்கரபகவத்
பாதர் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீ மந்த்ரமாத்ருகா
புஷ்பமாலா ஸ்தவத்திற்கு வாதூல ஸ்ரீ வேங்கட
ஸுப்ரஹ்மண்ய சர்மா வினுடைய தநயன்
ராமசந்த்ரசர்மா இயற்றிய மகரந்தம்
என்னும் தமிழுரை இவண்
முற்றும்

Scanned by CamScanner